Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 22 [04-06-93] வெள்ளிக்கிழமை ஓசை 106

## ஜனசவிய திட்டத்தில் 95 வீத வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஜனசவியக் கருத்திட்டத்திற்கான நிர்வாகச் செலவாக ஐந்து சதவீதமான பணத்தையே அரசு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்துக்கான மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியில் யாழ்.அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஈடுபட்டு வருகிறார். இவ் விடயம் தொடர்பாக இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் (10ஆம் பக்கம் பார்க்க)

### பாரிஸில் நடைபெறும்

# உதவும்நாடுகள்மாநாட்டிற்கு ரணில் தலைமையில் குழு!

## 800 மில்லியன் டொலர் கடன் கோரும்

(கொழும்பு)

**பாரிஸில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு செல்லவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இம்முறை 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவியைக்கோர சிறிலங்கா முடிவுசெய்துள்ளது.**

எதிர்வரும் 18ஆம் திகதி பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின்மாநாட்டிற்கு இலங்கைக்குழுவிற்கு பிரதமர்ரணில் விக்கிரமசிங்க தலைமைதாங்கி செல்கிறார். இவருடன் திறைசேரி செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கம், மேலதிக திறைசேரி செயலாளர் டாக்டர் லொயிட் பெர்னான்டோ, ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் செல்கின்றனர்.

இலங்கைக்கு உதவும் பாரிஸ் மாநாட்டில் 12 நாடுகளும் ஐந்து நிதிஉதவி வழங்கும் நிறுவனங்களும் பங்குபற்றுகின்றன. இலங்கை இம்முறையும் 800மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை கோரியிருக்கின்றது.

இதனிடையே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு தற்போதைய இலங்கை அரசியல் பொருளாதார நிலைமைபற்றி விளக்கும் கூட்டம் ஒன்று கடந்த 2 ஆம் திகதி கொழும்பு செத்சிறிபாயாவில் நடைபெற்றது.

## மீட்புநிதி சேகரிப்பு

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் காலை 9 00மணிதொடக்கம் 10.00மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்தமுடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## காவலிலிருந்து தப்பினால் கடும் தண்டனை

(கொழு பு)

கைது செய்யப்படும் போது எதிர்ப்பு தெரிவிப்பவர்களுக்கும், சிறையிலிருந்து தப்பிச் செல்வோருக்கும் இனி கடும் தண்டனை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தகவலை அமைச்சரவை பேச்சாளர் ஹரல்ட் ஹேரத்நேற்று தெரிவித்தார்.

இதற்கென தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை முடிவு செய்துள்ளது தடுப்பு காவல் முகாமிலிருந்து பலர் தப்பிச் செல்வதால் கடும் தண்டனை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## எதிரியின் பலத்தை குறைத்து மதிப்பிடாதீர்

[கொழும்பு]

எப்போதும் எதிரியினது பலத்தை குறைவாக மதித்து விடவேண்டாம். இன்றில்லாவிட்டால் நாளை தாக்குதல் நடக்கும். இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் மகிந்த பந்துசேன.

திருமலை, பொலநறுவை, அம்பாறை, அநுராதபுரம், வவுனியா மாவட்டங்களில் பணிபுரியும் ஊர்காவற் படையினரிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட 97 ஊர்காவற்படையினர் விசேட பயிற்சி முடித்து கொண்ட அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## இன்று கண்காட்சி ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், (10ஆம் பக்கம் பார்க்க)

## சிசிலின் பதவிக்காலம் ஒரு வருடம் நீடிப்பு

[கொழும்பு]

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இவரின் பதவிக்காலம் மே 15ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டது. எனினும் தற்போது அவருக்கு 1994 மே வரை பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவரின் பதவிக்காலம் நீடிக்கப்படமாட்டாதுஎன இரு மாதங்களுக்குமுன் பாதுகாப்பு வட்டாரங்களில் கூறப்பட்டது. ஆனால் புதிய ஜனாதிபதியின் ஆட்சியின்கீழ் இராணுவத் தளபதியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டிருக்கின்றது.

## இராணுவம் திரும்பியது

(வவுனியா)

நொச்சிமோட்டை ராணுவ காவலரண்களிலிருந்து சின்னக்குளம் சந்தியை நோக்கி நேற்றுக்காலை 10-00 மணியளவில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் முன்னேறிவந்தனர். பவள்கவசவாகனங்கள் சகிதம் வந்த இவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின் திரும்பிச் சென்றுவிட்டனர்.

## ஒருவார மோதலில் 14 படையினர் பலி

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வெலிஓயா, வவுனியா ஆகிய இடங்களில் இவ்வாரம் விடுதலைப்புலிகளுடனான மோதலில் 14 படையினர்பலியானதாக கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று தெரிவித்தார்.

முன்னைய வாரத்தை பார்க்கிலும் இந்த வாரத்தில் கூடுதல் அளவு மோதல்கள் இடம்பெற்றுள்ளன என்றும் பிரிகேடியர் அங்கமன மேலும் தெரிவித்தார்.

### நொச்சிமோட்டை மோதலில்

## பலியான, காயமடைந்த பொதுமக்களின் விபரம்

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் நந்த மோதல் சம்பவத்தில் இறந்த பொதுமக்களில் நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் பலர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

இறந்தவர்களின் அடையாளஅட்டையைக் கொண்டே நால்வரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளபோதிலும் அவர்களில் இருவரின் பெயர் விபரமே வெளியிடப்பட்டுள்ளது. ஞானேஸ்வரி - மன்னம்பிட்டி, தியாகலிங்கம் -பாலமோட்டை ஆகியோரே அந்த இருவரும் ஆவர்.

இம் மோதலின்போது காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரின் பெயர் விபரம் வருமாறு;

ச. சிவராசா (43) நெலுக்குளம், இராஜலிங்கம் - மகாலிங்கம் (38) ஜெயந்திநகர், கிளிநொச்சி, ஆ. முத்துலிங்கம் (48) முத்தையன்கட்டு, ஆ. இராசரத்தினம் (30) பன்றிக்கு எய்தகுளம், ஞானசேகரம் முத்தையன்கட்டு, எஸ். தயானந்தராசா-மன்னார், வி.

(10ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசா கொல்லப்படலாம்; தகவல் முன்னரே கிடைத்திருந்தது

[கொழும்பு]

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக சென்ற மார்ச் மாதம் ஒன்பதாம் திகதியே தகவல் கிடைத்திருந்ததாகவும், இதனையடுத்து அவரின் 13 மெய்ப்பாதுகாவலர்கள், 300 பாதுகாப்புக் குழு பொலிசாரும் உசார்ப்படுத்தப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இதுகுறித்து ஜனாதிபதி பிரேமதாசாவின் தனிப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் பி. எம். பி. மொகைதீன் என்பவருக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை பிரேமதாசாவைக்கொலைசெய்தவர் என சந்தேகிக்கப்படும் வீரகுமார் அல்லது பாபுஎன்பவர்மொகைதீனுடன் தனது நெருக்கத்தை வலுப்படுத்த அவருக்கு மது மற்றும் பெண்களை வழங்கினார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பிரதி பொலிஸ் அதிகாரி அமரசேன ராஜபக்ச செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார். இவ்வாறு பெண்களையும் மதுவையும் திரு. மொகைதீனுக்கு வழங்கியதன் மூலமே சுச்சரித இல்லத்திற்குள் நுழைந்தார் என்றும் இப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தான் இவ்விடயத்தில் குற்றவாளி அல்ல என்று தன்னிடம் திரு. மொகைதீன் கூறியதாகவும் வீரகுமார் தொடர்பாக ஏற்கனவே திரு மொகைதீன் தகவல் தந்திருந்தால் இக் கொலையை தடுததிருக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொலை நடைபெற்ற தினத்தன்று மிதிவண்டியில் வந்த சந்தேகநபர் மிதிவண்டியை நிறுத்திவிட்டு பிரேமதாசாவை நோக்கி நடந்து வந்தபோது பாதுகாப்பு அதிகாரிகள் அவரைத் தடுத்ததாகவும் இதைத் தூரத்தில் நின்று அவதானித்த திரு. மொகைதீன் தனது கைகளை அசைத்து அவரை அனுமதிக்குமாறு கூறியதாகவும அவர் மேலும் தெரிவித்தார். இதனால தற்போது திரு. மொகைதீனுடன் தொடர்புடைய பெணகள் விசார ( 10ஆம் பக்கம் பார்க்க )

## திலக்கருணரட்ண விலகினார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமனற உறுப்பினர் திலக்கருணரட்ண, கட்சியிலிருந்து வெளியேறி உள்ளார்.

இவர்கட்சிக்கெதிராகசெயற்பட்டாரென விசாரணை நடத்தப்பட்டதும் அதனைஎதிர்த்து இவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததும் தெரிந்ததே.

## தியாகி சிவகுமாரனின் 19ஆம் ஆண்டு நினைவு

(யாழ்ப்பாணம்)

தியாகி பொன். சிவகுமாரனின் 19ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்நாளை சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு உரும்பராய் சிவகுமாரன் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஈகைச்சுடர் ஏற்றல்,தேசியக் கொடி ஏற்றல், மாவீரன் சிவகுமாரனின் உருவப் படத்திற்கு மலர்மாலை சூட்டுதல் ஆகிய நிகழ்ச்சிகளை அடுத்து, மாலை 7-00 மணிக்கு பொதுக் கூட்டம் ஆரம்பமாகும். நினைவுரைகளை அடுத்து கலை பண்பாட்டுக்கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## வரி விளம்பரம்

### யூன் 11 முதல் சனி வக்கிரம்

யூன் 12இல் செவ்வாய் மாற்றம்விற்பனையாகின்றது. (பூபாலசிங்கம், மக்மிலன் புத்தகசாலைகள்-யாழ்ப்பாணம்.) சனிக்கு அஷ்டமத்து வியாழனால்நாட்டிற்குநன்மையில்லை ஜாதகங்களின் கணிப்புகளுக்கும், திருமணப்பொருத்தங்களுக்கும் சந்திக்கலாம். ''சத்யா'' (இடிகுண்டருகாமை)கட்டுடை.
(5030)

### சோதிடம்

அதிர்ஷ்டசாலியாக என்றும் வாழ ஆசைப்படுகிறீர்களா? உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள்: வேலணை சோதிடர் V. A. சிவராசா 152B அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(சி/5032)

### பெற்றுக் கொள்ளவும்

பேர்சுடன் ஒரு தொகைப் பணமும், வேறுஒரு தொகைப் பணமும 2மாதங்களுக்கு முன் கண்டெடுக்கப்பட்டு மானிப்பாய் V S.M. ஸ்ரோர்ஸில் உள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (சி-6758)

### கோடை

மகாகவியின் கோடை நாடகம். வெளியீடுவிற்பனை:பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். சி 6739)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஒட்டோமற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ்.284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/6733)

### சைன் கல்வியகம்

பெண்களுக்கான மனையியல் கைத்திறன் டிப்ளோமா பயிற்சிகள .05.06.1993 புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. தையற்கலை, பூவேலை, கேக் ஐசிங், கைப்பணி, சமையற்கலை, கூந்தல் அலங்காரம். ஆறுமாத பயிற்சி முடிவில் சித்தியடைந்தவர்கட்கு Diploma in Economics Fine Arts சான்றிதழ் வழங்கப்படும் பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
(சி-6761)

## ஓதுங்கிகளும்

''அது நான் உயிருடன் இருக்கும் வரை நடவாது''

''எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்?''

'செத்த பிராணிகளைச் சுற்றி மொய்க்கும்இனத்தைச் சேர்ந்தவர் நீர் என்பது தெரிந்திருப்பதாலேதான்.''

''பிணங்களோடு வீரங்காட்டுபவர் நாம் என்கிறீரா?''

'உண்மைகசப்பானதுதான். ஆனால் கசப்பும் ஒரு சுவைதான். அது பற்றி உமக்கு எப்படித் தெரியபபோகிறது?''

''அடா! கேவலமான எருதே! நாளையல்ல.இன்றே உன் கொட்டத்தை அடக்குகிறேன் என்இனத்தோடு வந்து உன்னைத் தொலைப்பேன்.''

''உன் இனத்தைக் கலைக்க என் வால் ஒன்றே போதும் அழைத்து வா ஒரு கை பார்க்கிறேன்'' என்ற எருத்தின் பதிலுக்குக் காத்திரமல், 'தற்காலிகமாகத் தப்பினேன'' என்னும் உணர்வோடு இலையான் விரைந்து பறந்து கண்ணுக்குமறைந்தது.

## மேற்குலக

ஜீரியாவில் நடந்தது போல் இங்கும் நடப்பதை விரும்பாது தனது சனநாயக சீர்திருத்தங்களின் வேகத்தை வெகுவாகக் குறைத்து விட்டது. எனவே எகிப்திய அரசு பெரும் இக்கட்டில் இன்றுள்ளது.

### மேற்குலகின் அச்சம்:

எனவே இன்று மேற்குலகம் அதன் கூட்டாளிகளை சவூதி, குவைத் போன்ற பிற்போக்கு அரபுலக ஆட்சியாளர்களைக்கண்டு பெரிதும் அஞ்சுகின்றது மேற்குலகின் இந்த அச்சத்திற்கு இன்னுமொரு காரணமும் உண்டு இன்று இசுலாமியர் சனத்தொகை அதிகரிக்கும் வேகம் அமெரிக்காவில் கறுப்பினத்தவர் முசுலீம்களாக மாறும் வேகம் எல்லாமே ஒரு புதிய இசுலாமிய பரிமாணத்தைக் குறிக்கின்றன. கலாநிதி காலித் அல்-மன்சூர் என்கிறகறுப்பின அமெரிக்க சட்ட அறிஞர் கருத்துப்படி இவ்வுலகம நீண்ட காலத்திற்குத் தப்பி பிழைத்து இருக்குமானால் முதலில் அழியப் போவது வெள்ளை இனமாகவே இருக்கும். இதற்கு சான்றாக ஐ நாவின் சனத் தாகை பறறிய கணக்கெடுபபை அவர் காட்டுகின்றார். 65 ஆண்டுகளின் பின்னர் உலக சனத்தொகையில் 8 வீதம் மட்டுமே வெள்ளையராக இருப்பர் அப்போது உலகில் இருவரில் ஒருவர் முசுலீமாக இருப்பார். இன்று ஏறததாழ 130 கோடி முசுலீம்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது

எனவே முசுலீம் உலக நுழைவாயிலாக இருக்கும் எகிப்தில் ஏற்படப்போகும் மாற்றங்கள் பெரிதும்அவதானிக்கப்படுகின்றன. தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்குமானால் மக்கள் கிளர்ச்சியொன்று உடனடியாக தோன்றாது விட்டாலும் காலக்கிரமத்தில் முசுலீம் சகோதரத்துவக்கட்சி ஏனைய தீவிரவாத அமைப்புகள் உதவியோடு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும் எனகருதப்படுகின்றது. ஏனென்றால் இராணுவத்திலும் இவர்கள் ஊடுருவி விட்டனர் அண்மையில் சூடான், ஈரான் உறவுகளை முறித்த அல்ஜீரியாவின் உள்நாட்டமைச்சர் கூறினார்: ''மத அடிப்படைவாதம் எகிப்திலும்அல்ஜீரியாவிலும் வெற்றி பெற்றால் முழு அரபுலகமுமே அதனுள் தலை மூழ்க நேரிடும்''. இது வெற்று வார்த்தை அல்ல, உண்மை நிலை என்பதே தற்போதைய நிலை.

வெளிவந்து விட்டது

**மாற்றம்**

சஞ்சிகை: 03

[5002]

மீண்டும் யாழ்நகரில்
றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்

**தேன் சிந்தும் ஐஸ்கிறீம்**
வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் — புறூட் சலட் ஐஸ்கிறீம்
சொக்லட் ஐஸ்கிறீம் — வனிலா ஐஸ்கிறீம்
மற்றும சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி
அனைத்து குளிர்பான வகைகளுக்கும் சுவைமிகு,
கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்
★ உங்களை அழைககின்றார்கள் ★

''ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்''

**ஹொட்டல் றொலெக்ஸ்**
34ப, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
(சி-5028)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **கெங்காதேவி துரைராஜசிங்கம்**

தோற்றம்: 14-8-1955 — மறைவு: 14-6-1992

திதி: 04-06-1993

ஆண்டொன்று சென்றதம்மா
ஆற வழி காண வழி காணவில்லை
அன்புக்கு வரம்பானாய்
அருள் காட்டி ஆதரித்தாய்
பெண்மைக்கு ஒளி தந்தாய்
விண் புகுந்து விட்டாயே
என் செய்வோம்? இரங்கி நிற்கும்
எமைக்காக்க வாராயோ?

இந்து மகளிர் ஒழுங்கை. கந்தர்மடம். (சி/6752) கணவன், பிள்ளைகள், உறவினர்.

**B. A. 94** (பேராதனை)
விரிவுரைகள் ஆரம்பம்:**5. 6. 93** (12மணி)

**G A. Q. 93** (பேராதனை)
மீட்டல் விரிவுரைகள் ஆரம்பம்
**5. 6. 93** (1 மணி)

**G. A. Q. 94**

**1st in Com 94** (யாழ். பல்கலைக்கழகம்)
(வெளிவாரி)

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:
எஸ். அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-6759)

## நினைவு கூருகின்றோம்... 1993-06-04

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு கிளிநெச்சி - இரத்தினபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஆனந்தன்** (மாரிமுத்து மாதவன் - உதயநகர் - கிளிநொச்சி)

திருமலையில் பேரூந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சீனன்வாடிப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற்படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் போன 5 தமிழர்கள் ஆண்டான்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதிகள்.

கிளிநொச்சி - ஆனந்தபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட வான் தாக்குதலின்போது எறிகணை வீட்டிற்குள் வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 குழந்தைகள்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுமுத்திரை கொண்டு வரும் பணியின்போது கிளிநொச்சியில் வைத்துச் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலினால் பாரவண்டியுடன் எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட யாழ். செயலக ஊழியர் இருவர்.

1987ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 10ஆவது நாளாக மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின்போது பிள்ளையார் கோயிலினுள் தஞ்சமடைந்திருந்த நிலையில் பட்டினியால் மடிந்த நாலு வயதுக் குழந்தை.

1988ஆம் ஆண்டு மட்டு - மாமங்கம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். ராகவன்/கிளிக்குமார்** (மனுவல் அந்தோனிதாஸ் - கருவேப்பங்கேணி - மட்டு.)

**அலெக்ஸ்** (மட்டுநகர்)

1989ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு ஏறாவூர்ப் பகுதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட -

★ **மயிலு** (சிவலிங்கம் மயில்வாகனம் - செங்கலடி - மட்டு.)

★ **செல்வரத்தினம்** (செங்கலடி - மட்டு.)

யாழ். அரியாலை தபால்பெட்டிச் சந்தியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு. உன்னிச்சைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் வீரச்சாவெய்திய -

**ஜெயராஜ்** (வடிவேல் நந்தகுமார் - 35-ம் கிராமம் - அம்பாறை)

திருமலையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண் அடைந்து எமைப் பிரிந்த -

**லெப். மன்னன்** (நடேசகுரு உமாகாந் - 740, நாவலர் வீதி, தம்பலகமம் - திருமலை)

1992ஆம் ஆண்டு யாழ் - தெல்லிப்பழைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் குறிபார்த்துச் சுட்டதில் வீரச்சாவெய்திய -

**பாண்டியன்** (ஞானசிங்கம் கனகசிங்கம் - வீரபத்திரர் ஆலயம், 7-ம் வட்டாரம், முனைக்காடு - மட்டு.)

**2-ம் லெப். தேவன்/ராஜ்** (கந்தசாமி மகிழ்ராஜ்- காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் - யாழ்.)

வவுனியா யோசப் முகாம் தடுப்புக்காவலில் இருந்து தப்பி ஓடுகையில் மின்சார வேலியில் சிக்கி உயிர் நீத்த 2 தமிழ் இளைஞர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி/6757)

# குடாநாட்டு முற்றுகையை முறியடித்த கடற்புலிகளின் கடலாதிக்கம்

இரண்டாவது கட்ட ஈழப்பேரின் பிரதான இராணுவ கேந்திர இலக்கு (Strategic Objective) யாழ்ப்பாண குடாநாட்டு முற்றுகையாகும். இந்த இலக்கு வெற்றிகண்டால் விடுதலைப் புலிகளின் அசைவியக்க ஆற்றலை (Mobility) துண்டித்து, புலிப்படை வீரர்களை குடாநாட்டுக்குள் முடக்கி, போரை தனக்கு சாதகமான முறையில் நகர்த்திச் செல்லலாமென சிங்கள இராணுவத் தலைமை திட்டம் தீட்டியது.

ஆனையிறவு சமரைத் தொடர்ந்து இந்தத் திட்டம் செயல்வடிவம் பெறத் தொடங்கியது. வெற்றிலைக்கேணி இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டது. வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு தளம்வரை, கிட்டத்தட்ட எட்டு மைல் தூரத்திற்கு நீண்டதொரு இராணுவவேலி அமைக்கப்பட்டது. பலகோடி செலவில், பல ஆயிரம் இராணுவத்தினரை குடியமர்த்தி, பிரமாண்டமான இராணுவ முற்றுகை வலயம் நிறுவப்பட்டது. இதன் உடனடி விளைவாக ஊரியான் பாதைக்கு மூடுவிழா நடந்தது.

இது ஒருபுறமிருக்க, சிங்கள இராணுவம் பூநகரிப் பிரதேசத்தை ஆக்கிரமித்து, சங்குப்பிட்டி-கேரதீவு பாதையை மூடியது. நாகதேவன் துறையிலிருந்து கல்முனைவரை கிட்டத்தட்ட பத்து மைல் வரை இன்னுமொரு இராணுவவேலி நிறுவப்பட்டது. அத்துடன் நீரேரிப் பிரதேசத்தில் போக்குவரத்தை முறியடிப்பதற்காக நாகதேவன் துறையில் ஒரு சிறிய கடற்படைத் தளமும் அமைக்கப்பட்டது. கடற்பரப்பு நகர்வுகளை கண்காணிக்க ராடர் நிலையமும், பீரங்கித் தளமும் நிறுவப்பட்டதுடன், கடல் ரோந்திற்காக பல நீரூந்து விசைப் படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி முள்வேலி இறுக்கப்பட்டது. முற்றுகை வலயம் முழுமைபெற்று விட்டதாக இராணுவத் தலைமை எண்ணிக் கொண்டது. வெற்றிலைக்கேணியிலிருந்துகல்முனை வரை யாழ்ப்பாணத்திற்கு விலங்கிடப்பட்டு விட்டதாக சிங்கள பேரினவாதம் திமிர் கொண்டது. இந்த நீண்ட, நெடுந்தூர முற்றுகையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட துருப்புகள் முடக்கப்பட்டன. போராளிகளின் நடமாட்டமும், பொதுமக்களின் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு விடுமென கொழும்பு எதிர்பார்த்தது. போருக்கு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் கேந்திர நுட்பம் வாய்ந்த ஒரு பாரிய திட்டத்தை செயற்படுத்தி விட்டதாக முப்படைத் தலைமையகம் திருப்தி கொண்டது.

ஆனால் நடந்ததோ வேறு.

முற்றுகை முறியடிக்கப்பட்டது. கிளாலிக் கடற்பரப்பில் புலிகள் இயக்கம் புதிய பாதையை திறந்துவிட்டது.

கிளாலிக் கடலில், கடற்புலிகள் தமது கடலாதிக்கத்தை நிலைநாட்டினர்.

வரலாற்றில் முதல் தடவையாக, தமிழீழ விடுதலைப் போரில், எமது கடற்பிரதேசத்தின் ஒரு பகுதியில், அதுவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ். கடல் நீரேரியில், கடற்புலிகளின் மேலாதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்

இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது? புலிகளின் போராட்ட படிநிலை வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய வரலாற்றுத் திருப்பமாக இந்த நிகழ்வு எப்படி இடம்பெற்றது?

நீண்ட கடற்பரப்பும், நீரிணையும், நீரேரிகளும் கொண்ட எமது பிரத்தியேகமான பூகோள சூழலில் கடலாதிக்கத்தின் முக்கியத்துவத்தை தலைவர் பிரபாகரன் நன்கு உணர்ந்திருந்தார். போராட்டம் முதிர்ச்சிபெற்று, இறுதிக் கட்டத்தை நெருங்கும் பொழுது யுத்தத்தின் போக்கை நிர்ணயிப்பது கடலாதிக்கப் போர் என்பதையும் அவர் அறிந்திருந்தார். இந்த மதிநுட்பமான தூர நோக்குப் பார்வையின் பெறுபேறாக கடற்புலி அமைப்பு உருவாக்கம் பெற்றது. போராட்ட நிர்ப்பந்தங்களுக்கு ஏற்ப துரித வளர்ச்சியும் கண்டது. கடற்போர்க் கலையில் அனுபவமும் பெற்றது. தரை யுத்தங்களின் வேகம் தணிந்துபோக, குடாநாட்டு முற்றுகை இறுக, கிளாலிக் கடற்பரப்பு போர்க்களமாக மாறியது. கடற்புலிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க யுத்த காண்டம் தொடங்கியது.

கடந்த 10 மாதங்களாக தமிழீழப்போர் கிளாலிக் கட

**பிரம்மஞானி**


லில்மையம்கொண்டிருக்கிறது. அங்கு உக்கிரமான கடற் சண்டை நிகழ்ந்து வருகிறது. 5 கடல் மைல் அகலமும், 15 கடல் மைல் நீளமும் கொண்ட விரிந்த கடற்பரப்பில் சிங்களக் கடற்படையும், தமிழ்க்கடற் படையும் மாறிமாறி தொடர்ச்சியாக மோதி வருகின்றன. இரவில் வாணவேடிக்கை போன்று நடைபெறும் இந்தக் கடற்சமர்களை எமது மக்கள் கண்டுகளிப்பதும் உண்டு,

கிளாலிக் கடற் சண்டைகளில் சிங்களக் கடற்படைக்கு கணிசமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இரண்டு, மிக நவீனமான நீரூந்து விசைப்படகுகள் கடற் புலிகளால் நாசமாக்கப்பட்டுள்ளன. 25 அடி நீளமான ரோந்துப் படகு ஒன்றும் அழிக்கப்பட்டிருக்கிறது. கடற்படையிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கடற்படையினருக்கு பலத்த உயிர்ச் சேதமும் ஏற்பட்டிருக்கிறது. உயிர்ச்சேத விபரத்தைக் கடற்படைத் தலைமையகம் வெளியிட மறுத்து வருகிறது. கடற்படையினரின் மனவுறுதி தளர்ந்து விடும் என்ற அச்சத்தினாலோ தெரியவில்லை.

இந்த இழப்புகளால் கடற்படை ஆட்டம்கண்டிருக்கிறது. இதனால் கடற்புலிகளுடன் நேரடி மோதலைத் தவிர்த்துக் கொள்வதிலேயே கடற்படையினர் தீவிர அக்கறை காட்டி வருகின்றனர்.

''கடற் சண்டை பெரும்பாலும் 10 அல்லது 15 நிமிடங்கள் வரைதான் நீடிக்கும். அதுவும் தூரத்தில் நின்றுதான் சண்டை பிடிப்பார்கள். எமது சண்டைப் படகுகள் நெருங்கியதும் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடிக்கிறார்கள். நாங்கள் கலைத்து அடிப்பதும், அவர்கள் ஓடுவதுமாகவே கடற் சண்டை இடம் பெறுவது வழக்கம்'' என்று பெருமிதத்துடன் கூறினான்

''கடற் புலிகள் எந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது துணிந்து, முன்னோக்கிஎம்மை நெருங்கி வருகிறார்கள். இது எமக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது.'' இவ்வாறு சமீபத்தில் ஒருகடற்படை அதி



கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை

காரி கூறியிருப்பது கடற்புலிகளின் அபாரமான துணிவை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

''மக்களின் பாதுகாப்பு அரணாகவே நாம் கிளாலிக் கடற் பரப்பில் செயற்படுகிறோம். எதிரியின் பிரதான நோக்கம் மக்களைத் தாக்கிஅழிப்பது தான். மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதுதான் எமது முக்கிய நோக்கம். மக்களின் பயணப் படகுகளுக்கும் எதிரியின் கொலைப் படகுகளுக்கும் மத்தியில், நாம் நடுவே நின்று போராடுகிறோம். இந்தக் கடற்போரில் நாமும் இழப்புகளைச் சந்திக்கிறோம். எமது போராளிகள் தமது உயிரைப் பணயம்வைத்தே மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள்'' என்று கூறினார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை.

கிளாலிக் கடற்போரில் இதுவரை எட்டு கடற்புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள். சமீபத்தில் கூட (24-05-1993இல்) சாஜகான், சேகர், மணியரசன் ஆகிய வீரர்கள் மக்களுக்காக மடிந்திருக்கிறார்கள். தமது உயிரைப் பணயம் வைத்து புலிகள் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறார்கள் என்ற சூசையின் கூற்றை இந்த தற்கொடைச் சாவுகள் நிரூபித்துநிற்கின்றன

இந்தக் கடற்போர் ஆபத்து நிறைந்தது. எதிரியின் விசைப் படகுகள் வேகம் மிகுந்தவை. 50 கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டவை. கடற்படைக்குபின்தள வசதிகள் உண்டு. ஆகாயப்

கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி நிலைகுலையும் போதெல்லாம் விமானப்படையின் உதவியையும் பெற்றுக் கொள்ளலாம். தேவை ஏற்படும்பொழுது தரைத் தள பீரங்கிகளும் கைகொடுத்து உதவும். இந்தக் கடற்போரில் படையாற்றல் சமபலம் எதிரிக்கு சாதகமாகவே அமைந்திருக்கிறது. பல நெருக்கடிகள் மிகுந்த போர்ச்சூழலில், வசதிகள் எதுவுமற்றநிலையில், வரையறுக்கப்பட்ட வளத்தில் கட்டப்பட்ட தொழில்நுட்ப பலத்தில், ஒரு சக்திவாய்ந்த எதிரிக்கு சவாலாக கடற்புலிகள் வளர்ந்து நிற்பதும், இக் கடற் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டு ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதும் வியக்கத் தக்க விடயமாகும்.

இது எப்படிச் சாத்தியமாகியது என்றுசூசையிடம்கேட்டபொழுது, ''விடாமுயற்சி, துணிவு, தன்னம்பிக்கை, போர்த்திறன், எல்லாவற்றிற்கும் மேலாக மக்களுக்காக தம் உயிரை ஈர்க்கும் அலாதியான அர்ப்பணிப்பு'' என்று உறுதியான பதிலிறுத்தார்.

கடற்புலிகளின் பாதுகாப்பு கவசம் இருப்பதால் கிளாலிப் பயணம் தொடர்கிறது. யாழ் குடா முற்றுகையின் முதுகெலும்பு கடற்புலிகளால் முறிக்கப்பட்டுவிட்டது.

கிளாலிக் கடற்பயணத்தில் பொதுமக்கள் கொலையுண்ட சம்பவங்கள்பற்றி சூசையிடம் கேட்டேன் ''கடற் புலிகளின் பாதுகாப்பு இல்லாத சமயத்தில இந்தப் படுகொலைகள் நடந்திருக்கிறது. எமது பாதுகாப்பு இருக்கும் வேளையில் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை. இப்பொழுது மிகவும் கட்டுப்பாடான ஒழுங்கமைப்பில் பயணிகள் போக்குவரத்து நடக்கிறது'' என்று விளக்கினார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி.

இப்பொழுது கிளாலிப் பயண நாட்களை நிதி துறையினர் முன்கூட்டியே அறிவித்துவிடுகின்றனர். அந்த நாட்களில் கடற்புலி படகுகள் வியூகம் அமைத்து காவல்புரிய கிளாலிப் பயணம் நிகழும். அந்த நாட்கள் எந்த நாட்கள் என்று கடற்படைக்கும் தெரியும். நூற்றுக்கணக்கில் படகுகள் நகர்வது ராடர் திரையில் வெண்ணிறப் புள்ளிகளாக அசையும். பகிரங்கப் பிரகடனம் செய்து, புலிகள் இயக்கம் கடல் முற்றுகையை உடைப்பதைக் காண சிங்களக் கடற்படைக்கு சினம் எழும். நாகதேவன் துறையிலிருந்து நீரூந்து விசைப்படகுகள்

எதிர்பார்த்து புலிகளின் கடற் குருவிகள் காத்து நிற்கும். கடற்போராளிகளுடன் மோதுவதை தவிர்த்து கடற் பயணிகளை தாக்குவதற்கு கடற்படை முயற்சிக்கும். அந்த நகர்வுகளை இனம்கண்டு கடற் குருவிகள் கடுகதி வேகத்தில் பறக்கும். கால்மணி நேரம் கடற்சண்டை நடக்கும். அதன்பின் ஓட்டப் போட்டி நிகழும். புலிகள் விரட்ட, நீரூந்துப் படகுகள் பின்வாங்கி ஓட, பூநகரி முகாமிலிருந்து பீரங்கிகள் முழங்க, கிளாலிக் கடல் விழாக் கோலம் கொள்ளும்.

தரை யுத்தம் போல அல்லாது கடற்போர் வித்தியாசமானது. தரையின் பொருண்மிய புறநிலைகளை கண்டறிந்து செயற்படலாம். இயற்கையின் கோடுகளை கண்டு கொள்ளலாம். பாதைகளை வரித்துக்கொள்ளலாம். விழுப்புண் ஏற்பட்டு விழும்பொழுது நிலம் தாங்கிக்கொள்ளும். கடல் அப்படியல்ல. எல்லையற்றதாக விரிந்து கிடக்கும். குறிப்புகள் புலப்படாது. இருள் கவிந்து கொண்டதும் பாதைகள் தெரியாது. சதா அசைந்து கொண்டிருக்கும் அதன் முதுகில் சவாரி செய்துகொண்டு சண்டை பிடிப்பது சிரமம். உலுக்கி, தூக்கி எறிந்தபடி படகு கடுகெதியில் விரைந்து செல்லும் பொழுது குறிபார்த்துச் சுடுவது இலகுவான காரியமல்ல. படகு தீப்பற்றி எரிந்துவெடித்தால் காயமடைந்தவர்களை கடல் விழுங்கிக் கொள்ளும்.

கடற்போர்க்கலை மிகவும் நுட்பமானது. அதற்கு நிறைய பயிற்சியும் அனுபவமும்தேவை. மீன்போல கடலோடு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அத்துடன் கடற்போருக்கு அபாரமான நெஞ்சுரமும் வேண்டும். எந்த நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும். எல்லையற்றதாக விரிந்து கிடக்கும் கடற்பரப்பில், எந்த நேரத்தில், எந்த மூலையிலிருந்து எதிரி தலையெடுப்பான் என்று அனுமானிப்பது கடினம்.

''எமது போராளிகள் கடற் போர்க்கலையில் வல்லவர்கள். அபாரமான துணிச்சல் கொண்டவர்கள். எமது துணிவிற்கே எதிரி பயப்படுகிறான்,'' என்றார் சூசை.

கடற்புலிகளின் வளர்ச்சி பற்றியும், கிளாலி கடற்பரப்பில் அவர்கள் நிலை நாட்டியுள்ள கடலாதிக்கத்தின் முக்கியம் பற்றியும் எமது மக்கள் உணராமல் இருக்கலாம். ஆனால் எதிரி நன்கு உணர்ந்



(10ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# ஒதுங்கிகளும் ஒதுக்கிகளும்

சொக்கன்

தனது எசமானனின் நன்றி கலந்த கவனிப்புக்கும் பராமரிப்புக்கும் உரித்தான அந்த எருது பரந்து கிடந்த பச்சைப் பசிய புல் வெளியில் மேய்ந்து கொண்டிருந்தது.

எசமானனுக்கு அது ஓய்வு நாள். அவன் தொழில் வண்டி ஓட்டுதல் நாட்டிலே கார்களும், லொறிகளும், லான்ட் மாஸ்டர்களும் ஒறுப்பாகி அவற்றின் தேவைகளில் ஒரு பகுதியையாவது நிறைவு செய்துவரும் அவன் தொழிலை ஒரு வகையிலே சமூகத் தொண்டு என்றுதான் சொல்ல வேண்டும்.

அவனுடைய தொழில் — தொண்டு — திடீரென்று மவுசுக்கு உள்ளாகிவிட்ட போதிலும், அவன் பேராசைக்காரன் அல்லன். தனது எருத்தை வெறும் மாடாகக் கருதிக் கசக்கிப் பிழிந்து காசுழைக்க விரும்பாத அன்புள்ளம் கொண்டவனாதலால், அன்றன்று தன் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்யும் அளவிற்கு அதன் உழைப்பினைப் பயன்படுத்தி, மற்ற வேளைகளில் அதற்குப் பரிபூரண சுதந்திரம் வழங்கியிருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களோடு அந்த எருது மூன்றாவது பிள்ளை, உழைக்கும் பிள்ளை!

பச்சைப் புல்லை மரகதக் கல்லாக்கி அதனிடையே பொன் கம்பிகளை இழைகளாய் ஒட்டி மாயாசாலம் செய்கின்ற காலைக் கதிரவனின் ஆடலில் மனம் பதிக்காது, அந்த எருது தனது வயிற்றுப்பாட்டிலேயே முழுமையாக ஈடுபட்டிருந்த வேளையில், இலையான் ஒன்று பறந்து வந்து அதன் முதுகில் அமர்ந்தது.

தன்னிலும் பெரியவர்களாய் உள்ளவர்களோடு ஒட்டி உறவாடி நட்புக் கொள்வதால் தானும் பெரியவனாகி விடலாம என்ற நப்பாசை இந்த இலையானின் கல்யாண குணம். ''ஐயா, பெரியவரே, வணக்கத்திற்கு உரியவரே'', என்றெல்லாம் அவர்களை அழைத்து மயக்கிக் காலப் போக்கில் மச்சான் முறை கொண்டாடி, இறுதியில் அவர்களைத் தன்னிலும் கீழான அற்ப பிராணிகளாய் மதித்துத் தான் அவர்களிலும் பெரியவன் என்று காட்டிக் கொள்ளும் திறமை அதற்கு இயல்பாகவே வாய்த்திருந்தது.

அன்று எருத்தோடு நட்புப் பிடிக்கத் தீர்மானித்ததன் முதல் அங்கந்தான் அது எருத்தின் முதுகில் அமர்ந்தமையாகும்.

தன் வருகையை வீட்டாருக்கு வெளிப்படுத்த முன் பக்கக் கதவில் பதித்திருக்கும் மணியை அழுத்துபவன் போல இலையான் கிணுகிணுக்கத் தொடங்கியது. ஆனால் எருதோ ஏகாக்கிர சித்தத்துடன் தனது வயிற்றுத் தேவையை நிறைவு செய்து கொண்டிருந்தது. இலையான் தனது முதுகிலும், முகத்திலும், கொம்புகளிலும் பல வேளைகளில் வாற்பகுதியிலும் அமர்வதும் பறப்பதும் எருத்தைப் பொறுத்த வரையில் அதன் கவனத்தைக் கவரக்கூடிய பிரமாதமான ஒன்றல்ல என்பதை ஏனோ இந்த இலையான் அறிந்திருக்கவில்லை. அறிய முடிந்திருந்தாலும் அந்தச் சாதாரண இலையான்களுக்கும் தனக்குமிடையே பதவி அந்தஸ்திலே பாரிய வேறுபாடு உண்டு என்பது அதன் அழுத்தமான நம்பிக்கை. 'எல்லோரையும் போலவே எனை எண்ணலாகுமோ டி போடி' என்ற பாட்டு அதற்குத் தெரியாது உண்மைதான். ஆனால் அந்தப் பாடற் கருத்தை எதேச்சையாகவே வரித்துக் கொண்ட பெருமை அதற்குண்டு.

இலையான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தது. எருத்தின் கவனம் அதன் பக்கம் திரும்பவேயில்லை! ''எவ்வளவு பெரியவன் நான்? நானே வந்து நட்புறவு பாராட்ட, இந்த அற்பபிராணி சிறிதும் கவனியாதிருக்கிறதே!'' என்று கோபம் பீறிட்டெழுந்தது இலையானுக்கு.

''இன்னும் சிறிது பொறுமையைக் கடைப்பிடிப்போம்' என்று முடிவு செய்தது அது. எருத்தின் முதுகுப் பிரதேசங்கள், முதுகின் கீழ்ப்பகுதிகள் என்று ஓரிடமும் விடாது மொய்த்து, கிசுகிசு காட்டி எவ்வளவோ முயன்றும் எருத்தின் கவனம் சிறிதாவது திரும்பிய பாடாயில்லை.

இலையான் எழுந்தது. எருத்தின் முகத்துக்கருகே சென்றது. தன் இன்னிசையை எழுப்பியது. எருதோ தன் தலையை மெல்ல அசைத்து காதையும் ஆட்டியது. அந்தக் காது ஆட்டலிலே அகப்பட்ட இலையானின் இரண்டு கால்கள் சுளுக்குக்கு உள்ளாயின. நோவு தாங்க முடியாததாயிருந்தது.

''அடேயப்பா! அசுரபலந்தான் இந்த மாட்டிற்கு'' என்று அது ஒருகணம் நினைத்ததில் வந்ததுபோனது தெரியமல் மெல்லக் கழன்று விடுவோமா என்ற ஞானம் கூட உண்டாயிற்று.

அது உரோசக்கார இலையான். ''கேவலம் உடற்பலத்தால் ஆவது ஒன்று உண்டோ? இப்படியான ஆட்களின் தலைக்குள்ளே கழிமண்தான் தேவைக்கதிகமாக இருக்கும். உருவத்தால் எனக்கிருக்கும் மூளைத்திறத்திலே ஆயிரத்தில் ஒரு கூறாவது இதற்கிருக்குமா?'' என்று தன்னைச் சமாளித்தபடி, நோவினால் சிணுங்கிக் கொண்டே, அது மீண்டும் மெல்லப் பறந்து சென்று பழையபடி எருத்தின் முதுகில் அமர்ந்தது.

''இனி வாய் திறந்து பேசினால் மட்டுமே என் நோக்கம் நிறைவேறும்'' என்ற முடிவுக்கு வந்து ''மகாகனம் பொருந்திய எருதாரே'' என்று பவ்வியமாக அழைத்தது. வெளிப்படையான கருத்து 'மதிப்பிற்குரிய' என்றிருந்தாலும், உட்கருத்து வெறும் 'தசைமலையான' என அமைந்து எருத்தை நையாண்டி பண்ணிவிட்ட தானஒருதிருப்தி அவ்வேளையிலும் அதற்கு உண்டானது.

எருது அலட்சியமாக, ''உம்...'' என்றது.

''வணக்கம் மகாமகாகனம் பொருந்திய எருதாரே!''

'வணக்கம்'' என்று ஒப்பாசாரமாகப் பதிலளித்த எருது,

''நீர் யார் என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று வினாவியது.

''என்னைத் தெரியாத முதற் பிரமுகர் தாங்கள் தாம்'' என்று இலையான் பதிலளித்த போது, அளவிட முடியாத அகம்பாவம் அதன் குரலிலே தொனித்தது இதனைப் புரிந்து கொண்ட எருது,

'தெரியாததைத் தெரியாது என்று சொல்பவர்கள், தெரியாததைத் தெரியும் என்பவர்களிலும் அறிவாளிகள் என்று என் எசமான் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன்'' என்றது.

இலையான் விழித்துக் கொண்டது. 'வாக்குவாதம் என்று வந்தால் எருது தனக்குத் தண்ணீர் காட்டி விடும், என்னும் உண்மை அதற்குத் துலாம்பரமான போதிலும், தன் தோல்வியை ஒப்புக் கொள்ள விரும்பாத அது. ''மானிடரின் உணவுகளை எச்சிற்படுத்திப் புனிதமாக்கும் தெய்வாம்சமும், அவர்களின் கழிவுகளில் அளைந்து அவற்றைப் பரிசுத்தமாக்கிக் கடைத்தேறவைக்கும் பொது நலமும் வாய்ந்த பெரியோன் ஒருவன் இருப்பானானால் அவன் நான்தான். என் பெயர் மாண்புமிகு இலையான்'', என்றது.

''ஒன்றை விட்டுவிட்டீர்கள்''.

''சொல்லுங்கள்''.

''இலையானோடு அவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்கலாமே! என் எசமானின் மகன் கடிதங்களுக்கு முகவரி எழுதும்போது முகவரிக்குரியவரின் பெயருக்கு முன்னால் 'உயர்திரு' என்றும் பெயரின் பின்னால் 'அவர்கள்' என்றும் இடுவதாகச் சொல்கிறான்.''

''அதுதவறு ஒருவருக்கு ஒரு மரியாதைஅடையேபோதும்.'

''அப்படியா? அதுவும் சரிதான். எனக்குக்கூட ஒரு வால் தானே இருக்கிறது? முகத்திலும் வால் இருந்தால் சீச்சீ! அசிங்கம்''.

தனது மரியாதை அடையினை 'வால்' என்று எருது பரிகசிப்பதைக்கேட்கப் பெரும் சீற்றம் இலையானுக்கு ஏற்பட்டாலும், தனது வருகையின் நோக்கம் இன்னமும் நிறைவேறாததால் அது மிகச் சிரமப்பட்டுப் பொறுமை காத்தபடி, ''அது சரி! நீண்டநேரமாக என் வருகையை நான் அறிவித்த பொழுதும் என்னைக் கண்டதாகவோ, உங்களுடன் உரையாடக் காத்திருப்பதாகவோ நீங்கள்சிறிதுகூடப் புலப்படுத்த வில்லையே! இது தான் தங்கள் பண்பாடா?'' என்று பலநாட் பழகியது போல உரிமை கொண்டாடும் குரலிலே இலையான் சிணுங்கியது.

''வருகையை அறிவித்தீர்களா? வேடிக்கையாக இருக்கிறதே! எப்படி அறிவித்தீர்கள்?

''உங்கள் முதுகில், அதன் பரந்த பிரதேசத்தில் எங்கெங்கெல்லாம் உட்காரமுடியுமோ அங்கெல்லாம்உட்கார்ந்தேன். அத்தோடு நின்றேனா? அசிங்கமான பகுதிகளை உறுப்பாகக் கொண்ட உங்கள் அடிப்பாகத்திலும் சுற்றிச் சுற்றி வந்து அமர்ந்தேனே!'' என்றுசொல்லியபடி ஏதோ கெட்ட நாற்றத்தைச் சுவாசித்தது போல மூக்கைச் சுழித்தது இலையான்.''

''அடடா! மன்னிக்கவும். உமக்கும் நன்மணம், துர்நாற்றம் என்ற வேறுபாடு இருப்பதுபற்றி எனக்கு மகிழ்ச்சி! உமது சுவையுணர்வு உயர்ந்ததுதான்!'' என்று எருது கிண்டல் பண்ணியது, இலையானின் நெஞ்சைத் துளைத்தது.

ஆனாலும் விடவில்லை. ''இவ்வளவு சிரமமும் உங்களோடு நட்புக் கொள்ளும் ஆசை காரணமாகவே மேற்கொண்டேன். சேச்சே! இப்பொழுது நினைத்தாலும் வயிற்றைக் குமட்டுகிறது''.

இதனைக் கேட்டதும் எருத்தின் சிரிப்பு முக்காரமாய் வெளிப்பட. அந்த இடியோசையில் அச்சமும் திகைப்பும் அடைந்த இலையான் நடுங்கிப் பின் சமாளித்துக்கொண்டது.

''எனது பண்பாடு பற்றிச் சற்றுமுன் நையாண்டி பண்ணினீர். ஒருவரை அவர் இடத்திலே காணச் சென்றால் முன் பக்கமாகச் சென்று முறையாகக் காண்பதுதான் பண்பாடு'' என்றது எருது.

''இனத்துக்கு இனம் பண்பாடு வேறுபடும் இதுஉங்களுக்குத்தெரிந்திருக்கவேண்டுமே!'

மீண்டும் சிரிப்பை முக்காரமாக வெளிப்படுத்தி இலையானைப் பயத்துக்கு உள்ளாக்கிப் பின்பு தெளியவைத்த எருது, ''ஓமோம், உங்கள் பண்பாடு எப்போதும்வீடுகளின் பின்புறத்திலுள்ள கழிவுகளிலிருந்து. தான் ஆரம்பிக்கும என்ற வரலாறுஎனக்குத்தெரிந்ததுதான் தெரிந்தும் அந்தப் பண்பாட்டைக் குறைத்துப் பேசிவிட்டேன் பொருட்படுத்தாதீர்'' என்றது.

''போகட்டும்மன்னித்தேன். உங்கள் கவனத்தைத் திருப்ப முடியாது அலுத்துப்போன நிலையில்...''

''அலுத்துப் போனீர்? தயவு செய்து நான் சொல்வதைப் பொறுமையாகக் கேளும். என்னுடைய உடலை பார்த்தீரா? இது எவ்வளவு பெரியது! இதன் ஏதோ ஒரு மூலையில் நீர் வந்து அமர்வதனால், என் கவனம் திரும்பிவிடுமா? உண்மையில் நீர் என் முதுகில் அமர்ந்தீர் என்பது கூட நீர்சொல்லித்தான் எனக்குத் தெரியும்''

மாபெரும் அவமானத்தால் துடிதுடித்த இலையான் ''அப்ப[illegible]யும்ஆச்சோ! என்னை அவ்வளவு சிறிய அற்பப் பிராணியாக நினைத்து விட்டீரோ?''என்று அது உறுமியது.

எருது பதில்அளிக்கவில்லை. இலையானின் உறுமல் கூட மெல்லிய காற்றின் அசைவால் 'புல்' சிலிர்ப்பது போலத்தான் அதற்குத் தோற்றியது.

''பலத்தைக் காட்டுவதற்கும் உகந்த பாத்திரம் வேண்டும். இதுவோ அற்பத்திலும் அற்பமான சின்னஞ் சிறிய இலையான். இது பேசும்பொழுதே அனுங்கிக் கொண்டும் கால்கள் இரண்டிலும் நோவு ஏற்பட்டதுபோல முனகிக் கொண்டும் இருக்கிறதுபாவம்! என் பலத்தை இதற்குக்காட்ட வேண்டியதில்லை' இந்த நினைவோடு எருது தொடர்ந்தும் மௌனம் சாதித்தது.

'' தூ! உம்மையும் ஒரு பொருட்டாக நினைத்து உம்மோடு நட்புக் கொள்ள வந்தேனே! அது தவறுதான். மானிடரின் எச்சிலைபபுனிதம் செய்து...'' என்றுதனது சுயபுராணத்தைத் தொடர முற்பட்டது இலையான்.

''மானிடரின் உணவைத் தூய்மைகெடுத்து அவர்களுக்கு நோயை வருவிக்கும் அபாயமான பிராணி இனம் என்பதை அவர்கள் அறிவார்கள், அதனால் உங்கள் இனத்தை அவர்கள் விரைவிலே பூண்டோடுஅழித்துவிடுவார்கள்''.

''ஓகோ பகற்கனவு இது. மனித இனம் மண்ணுக்கு வர முன்னமே தோன்றி இன்று வரை வாழ்ந்து வரும் இனம் எங்கள் இனம். அவர்கள் அழிந்த பின்னரும் உலகிலே வாழப்போகின்ற பேரினம் எங்கள் மாபெரும் இலையான் இனம்'' என்று மேடைப் பேச்சுப்பாணியில் இலையான் முழங்கத் தொடங்கியது.

எருத்துக்கு எரிச்சல் தாழவில்லை. ''எனது உணவு முயற்சியையும் கெடுத்து வாய்ப்பந்தல் போடாமல் போய்த்தொலையும். உமது நட்பும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம்'' என்று அது சீறியது.

இலையானுக்கு அசாத்திய கோபம். ''நீர் மண்ணில் வாழும் சாமானிய பிராணி. என் இனம் மண்ணிலும் வாழும்;வானிலும் பறக்கும்''

''வானில் பறக்கிற மனிதர் இன்று படும்பாடு உமக்குத் தெரியாது போலும்'' என்று எருது கூறுகையில அதன் ஏளனத் தொனி இலையானின் உடலிலுள்ள ஒவ்வோரணுவையும் தாக்கி வருத்தியது.

''விண்ணில் பறப்பவர் பெய்யும் குண்டுமாரிகளால் மனித இனமே அழிந்து கொண்டிருக்கிறது தெரியாதா?''

''கோழைகள்''

''அவர்களைப் போல எங்களையும் நினைக்காதீர். நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து திரண்டு மேலே பறந்து வந்தால் உமது இனமென்ன? உலகத்தையே அழித்துவிடும் ஆற்றல் நமக்கு உண்டு. நாளைக்கே நானும் என் கூட்டத்தவரும் ஒன்று கூடி. நடவடிக்கைக்குழு ஒன்றை ஏற்படுத்தி அந்தக் குழுவின் பணிப்பின் பேரில் வந்து உமது பிரமாண்டமான உடற்பிரதேசத்தை ஆக்கிரமிக்கப் போகிறோம் ஜாக்கிரதை.''

(2 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழப் பெண்கள் துணிந்து எழுந்தால் தங்கள் தலைவிதியை மாற்றலாம்

## சீதனம்
### ஒரு விவாத மேடை

**ம. ஆனந்தநடராசன்**
(ஆசிரியர்)

சீதனப் பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே என்ற கருத்தினையே நானும் கொண்டிருக்கிறேன். ஆனால் இதற்குக் காரணம் பெண்களா ஆண்களா என்று கேட்டால் பெண்கள்தான் என்றுநான்சொல்லுவேன்.

பண்டைய காலத்திலிருந்தே தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வுக்காக தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை பிள்ளைகளுக்கு பகிர்ந்து கொடுக்கும் பழக்கம் தமிழ் மக்களிடையே இருந்து வருகின்றது. இதுபெண்ணுக்கு மட்டுமல்ல ஆண்பிள்ளைகளுக்கு கூட முதிசம் என்ற பெயரில் பெற்றோரால் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்று இந்நிலை மாறி பெண்பிள்ளைகளுக்கு மட்டுமே சீதனம் கொடுக்க வேண்டிய நிலைக்குச் சமூகம் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சொத்துக்களைப் பேணிக்காத்து அடுத்த சந்ததிக்கு கொடுக்கும் பெற்றோரின் பண்பு வரவேற்கக் கூடியதே.

இக் கையிருப்பு பொருளாதாரமே இன்றைய யுத்த சூழ்நிலையில் பெரும் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளுக்கெல்லாம் முகம் கொடுத்து இயல்பான வாழ்க்கையை தமிழ் மக்கள் வாழுவதற்கு உதவியது என்பது எங்கள் எல்லோருக்குமே தெரிந்த உண்மையாகும் ஆனால் இக் கையிருப்புப் பொருளாதாரம் மனைவியினுடைய சொத்தா அல்லது கணவனுடைய சொத்தா என ஆராய்ந்து பார்த்தால் அது அநேகமாக மனைவியினுடைய சொத்தாகவே இருக்கும். சொத்துயாருடையதாக இருந்தாலும் குடும்பத்திலே வேறு என்ன பிரச்சினைகள் இருந்தாலும் மனித குலத்தினிடையே பிரச்சினைகளையே உண்டு பண்ணும் தலையாய பிரச்சினையாகிய பொருளாதாரப் பிரச்சினை இங்கே முதன்மைபெறுகிறது.

முன்னர்வீடுவளவு, நிலபுலங்களாகக் கொடுக்கபட்ட சீதனம் இப்போது வீடு வளவு, பணம் என்ற வடிவத்தைப் பெற்றுள்ளது. இதில் பணமே முதலிடத்தைப்பெறுகின்றது. வீடு வளவு தற்காலிகமாகவில்லாத இராணுவ நடவடிக்கையால்இடம்பெயர்ந்தவர்கள்பலரின் வீடுகள்ராணுவவலயத்துள் இருப்பதால் அவை பெறுமதியற்றவையாகக் கணிக்கப்பட்டு அதற்குப்பெறுமதியான பணம் வழங்கப்பட்டு எத்தனையோ திருமணங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வீடுவளவு இன்றி வெளிநாட்டிற்கு பணத்தை செலவழித்து பெண்களை அனுப்பியும் திருமணம்செய்து வைக்கிறார்கள். காதல் திருமணங்களில் கூட பல இளைஞர்கள் பெண்ணின் சாதி, சமயம், சொத்துவிபரம், சகோதர, சகோதரிகள் பற்றிய விபரங்கள் எல்லாவற்றையும் நன்றாக அறிந்த பின்னரே காதலுக்கு உடன்படுகிறார்கள். இதேபோல் தான் விரும்பும் ஆடவனைப்பற்றிய சகல அம்சங்களையும் அறிந்த பின்தான் பெண்ணும் உடன்படுகிறாள் என்பது உண்மை. (இது எல்லோருக்கும் பொருத்தமானதல்ல) இதில் ஏதோ ஒன்றில் தன்னும் குறைகண்டால் ஆணோ பெண்ணோபின்வாங்கிய சம்பவங்களும் எம்மத்தியில் இல்லாமல் இல்லை.

தமிழ் மக்கள் விவசாயத் தொழிலையே மேன்மையான தொழிலாகவும், வருமானம் மிக்க தொழிலாகவும் அன்று கருதினர். ஆனால் இன்று வெளிநாட்டு வேலைவய்ப்புக்களால் பணமே தமிழர் பொருளாதாரத்தின் முதன்மையான காரணியாகவும் வெளிநாட்டில் வேலைசெய்து உழைப்பதே சிறந்ததென்ற எண்ணமும் மக்களிடையே மேலோங்கி நிற்கிறது.

''ஈட்டி எட்டினமட்டும் பாயும் பணம் பாதாளம் மட்டும் பாயும்'' என்ற மூத்தோர் வாக்கு இன்று தமிழ் பெண்களின்திருமணவிடயத்தில் நிதர்சனமாகின்றது, திருமண வயது வந்தும் திருமணமாகாமல் இருக்கும் பெண்களின் பிரச்சினைகளை அறிந்து பார்த்தோமானால் இது நன்கு புரியும். வீடு வளவு இருந்தும் கூட கேட்டசீதனத்தொகை கொடுக்க முடியாததாலேயே பல பெண்களின் திருமணம்தடைப்படுகின்றது என்ற உண்மை புலனாகும். அத்துடன் பெண்ணும் பெற்றோரும் ஒருகுறிப்பிட்ட அந்தஸ்தில் இருந்து இறங்கி வர மறுக்கிறார்களென்ற இன்னொரு உண்மையும் இங்கே மறைந்து கிடக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனால் இன்று தமிழீழத்தில் கணிசமான பெண்கள் திருமண வயதைஅடைந்ததும் திருமணம் செய்யாமல் இருக்கிறார்கள். இதற்கு காரணம் பெண்கள் தானென்றால் பெண்கள் இதை ஏற்றுக் கொள்வார்களா? அவர்கள் பெற்றோரையும் மற்றோரையும் சாட்டுக்கு இழுப்பார்கள். சென்றவாரம் மு.உமா எழுதிய கருத்தில் பெற்றோர்களே பெண்களின் தராதரத்திற்கு ஏற்ற வரன் வேண்டும் என்ற மனப்பாங்கை பெண்கள் மத்தியில் வளர்க்கிறார்களென்று எழுதியிருந்தார். பெற்றோர்கள் அப்படி எண்ணுவதில் தப்பேதும் உண்டா? அல்லது பெண்தான் நினைப்பதில் தப்பேதும் உண்டா? ஆனால் பெற்றோர்கள் நிலைமையை உணர்ந்துதம் மனதை மாற்றிக்கொண்டாலும்பெண்கள் இது விடயத்தில் பிடிவாதமாக இருக்கிறார்களே. இதைப்பற்றி இவர் என்ன சொல்லப் போகிறார்?

மேலும், தேவி பரமலிங்கம் என்பவர் கூறியிருந்த கருத்து கூர்ந்து நோக்கத்தக்கது. ''உலகம் அடங்கிலும் என்றில்லாமல் எங்கள் சிறிய தமிழீழப் பிரதேசம் அடங்கிலும் வாழ்கின்ற மக்களின் சரி அரைவாசிப் பேர்களுக்கு மேலானோர் இந்தச் சீதனப்பிரச்சினை இல்லாமல் ஆண் பெண் தாம்பத்தியவாழ்வை வரித்துக் கொண்டு வாழ்ந்து வருவதை எம்மால் மறுதது விடமுடியுமா?'' என்று அழகாகக் கேட்டிருந்தார். இவரின் இந்தத் தற்திருப்தி எத்தனை நாளைக்கு நீடிக்கப்போகிறது என்பதை இவர்சிந்தித்தாரா?

இவரின் கருத்தை வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் செறிந்து வாழ்வதும் சீதனப் பிரச்சினையின் களமாக அமைவதுமான யாழ்ப்பாணச் சமூகத்தை எடுத்து நோக்குவோமானால் யாழ்ப்பாணத்தில் மேல்வர்க்கம் என்பது இல்லை என்றே சொல்லலாம். (தமிழீழத்திலும் இல்லை என்றே சொல்லலாம்) மேல்வர்க்கம் எல்லாம் கொழும்புடனோ அல்லது பிறநாட்டுடனோ தம்மை முழுமையாக இணைத்துக் கொண்டு விட்டார்கள். யாழ்ப்பாணத்தில் வாழும் பெரும்பான்மையான மக்கள் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். பிரச்சினையின் கருவாக இப் பெரும்பான்மை மத்திய தரவர்க்க யாழ்ப்பாணச் சமுதாயம் இருக்குமபோது அரைவாசிப்பேருக்கு மேல் பிரச்சினை இல்லை என்று சொல்ல முற்படுவது எவ்வளவிற்கு ஏற்புடையதாக இருக்கும்.

வன்னி தென் தமிழீழப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தைப்போல் சீதனக் கெடுபிடிகள் இல்லையாயினும் இது இன்று அங்கும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இதற்கு முக்கியமான மூன்று காரணிகளைக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

1. அப்பகுதிகளில் இருந்து வெளிநாடு செல்வோர்.
2. அப்பகுதிகளில் இருந்து கல்விக்காகப் புலம் பெயரும் புத்திஜீவிகள்.
3. அப்பகுதிகளுக்கு அரச உத்தியோகத்திற்கெனச் செல்லும் யாழ்ப்பாணச் சமுகத்தவர்.

வன்னி, தென்தமிழீழப் பகுதிகளிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற கணிசமானளவு இளைஞர்களால் அப்பகுதிகளிலும் சொத்துக்களைவிடப் பணமே இன்று முதன்மை பெறுகின்றது. இது இன்றைய போர்ச் சூழலினால் இன்னும் மேம்படுகின்றது. மேலும் கல்விக்காக அவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களுக்கு குறிப்பிடக் கூடியளவில் தற்காலிகமாக இடம்பெயருகிறார்கள். கல்விக்காக யாழ்ப்பாணம் வரும் இளைஞர்கள் குறிப்பாக பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள் அதிக சீதனம் வாங்கி யாழ்ப்பாணத்திலேயே மணம் முடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்தில் மணம் முடிப்பதால் தமிழ் மக்களின் உறவுகள் வலுவடைகின்றன என்ற சந்தோசம் ஒரு புறமிருக்க, அநேகமாக அவர்களிடம் இல்லாத தமிழ்ச் சமுதாயத்தை சீரழிக்கும் சீதனம் என்ற பேய் அவர்களையும் பிடித்துவிட்டதை நினைக்கும் போது வேதனையாகவும் தமிழ்ப் பெண்களின் எதிர்காலம் பயங்கரமானதாகவும் இருக்கின்றது. நான் சொல்வது பொய் என்றால் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள] பத்து கல்யாணத்தரகர்களிடம் செல்லுங்கள். அவர்களில் ஒருவராவதுசொல்லுவார் பொடியன் வன்னி அல்லது மட்டக்களப்புப் பட்டதாரி. வீடுவளவோடை 5 லட்சம் கேட்கிறானென்று. அவர்கள் கேட்காவிட்டாலும் கூட இவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். தரகர்கள் அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கவும தயாராகஇருக்கிறார்கள். எப்படியோ இந்தப் பழக்கம் அவர்களையும் தொற்றிக் கொள்கிறது.

இப் படித்த இளைஞர்களிற் பலர் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் போது அவர்களும் இந்தப் பழக்கத்திற்கு ஆளாக்கப்பட்ட நிலையிலேயே செல்கிறார்கள். அப்பகுதியில் உள்ள மக்கள் இவர்களையும் அங்கு கடமை புரியும் ஏனைய உயர் உத்தியோகத்தர்களையும் (குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்) பின்பற்றித் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டு வரும் போது பல நல்ல பழக்கங்களுடன் இந்தக் கெட்ட பழக்கமும் அவர்களைத் தொற்றிக் கொள்ளவே செய்யும்: ஏன் தொற்றிக் கொள்ள வேண்டும்? என்று நீங்கள் கேட்கலாம். படித்தவர்களை மற்றவர்கள் பின்பற்றி வாழ்வதென்பது மனித இயல்பு. இது ஒன்றும் புதுமையானதுமல்ல, விதிவிலக்கானதுமல்ல. இதனால் இந்த வியாதி தமிழீழம் பூராகவும் பரவும் அபாயம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அப்போ இதற்குத் தீர்வே இல்லையா? மனங்களில் மாற்றம்உண்டானால்தீர்வு உண்டு. குறிப்பாகப் பெண்களின் மனங்களில் மாற்றம் உண்டானால் தீர்வு உண்டு. மு. உமாவைப் போல் பெற்றோரையும் மற்றோரையும் சாட்டாமல் தங்கள் வாழ்வை நிர்ணயிக்கத் தங்களுக்கும் உரிமை உண்டென்று பெண்கள் உணர்ந்தால் மாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. பெண்ணின் அந்தஸ்திற்கு ஏற்ற மணமகன் என்ற ஆசையை பெற்றோர்களே ஊட்டுகிறார்களென்று இவர் கூறினார் அந்தஸ்து இருந்தும், அறிவு இருந்தும், பண்பு இருந்தும் சாதியால் குறைந்தவனை பெண் ஏற்றுக் கொள்வாளா? அல்லது பெற்றோர்கள் ஏற்றுக் கொள்வார்களா? சாதியால் குறைந்தவனை மணஞ்செய்யக் கூடாதென்று மனதில் பதித்து விட்டார்களே பெற்றோர்களென்று இதற்கும் உமா அங்கலாய்ப்பார் உண்மைதான் பெற்றோரின் இக்கொள்கை பிழையானதென்றால் இதனால் பாதிக்கப்படும் பெண்கள் ஏன் இன்னமும் இதைப் பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கே வழக்கம் என்பதில் ஒழுக்கம் இல்லையேல் கழுத்துப போயினும் கைக்கொள்ள மாட்டோம் என்று இவர்கள் எழட்டும் பார்ப்போம். பெண்கள் திருமணப் பிரச்சினையில் குறுக்கே நிற்கும் சீதனத் தடை நீங்கிப் பலருக்கு இல்வாழ்வு கிட்டுகிறதா இல்லையா என்று பார்ப்போம். மேலும் தமது அந்தஸ்தை காப்பதற்காகவே பெற்றோர்கள் பெண்களுக்குச் சீதனத்தை வழங்குகின்றார்களென்றும் இது தாழ்வுச் சிக்கல் என்றும் இவர் குறிப்பிட்டிருந்தார். தன்னைவிட அந்தஸ்து குறைவான ஆடவனை அல்லது அந்தஸ்து இருந்தாலும் சாதியால் குறைந்த ஆடவனை மணப்பது என்பது பெண்ணுக்குரிய தாழ்வுச் சிக்கலென்பதை இவர் ஏற்றுக் கொள்வாரா?

இவரின் கருத்துப்படி இதெல்லாம் பெற்றோரால் வந்த வினையென்று இன்றைய சமுதாயம் பெற்றோரைக் குறை கூற, பின் இவர்களின் பிள்ளைகள் இவர்களைக் குறைகூற இது இப்படியே தொடர்கதையாகப் போகின்றது. எனவே இதற்கு முற்றுப்புள்ளியிடச் சீதனத் தடைச்சட்டம் கொண்டுவரப் படவேண்டும் என்று முடித்திருக்கிறார். சீதனத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட நாடுகளில் சீதனமுறை ஒழிந்து உள்ளதா குறைந்ததா கூடியுள்ளதா என்று பார்த்தால் கூர்ப்படைந்துள்ளது என்பதே உண்மையாகும். மக்களின் மனதில் மாற்றம் ஏற்படாத வரை சட்டம் கொண்டு வரப் படுதல் என்பதோ கடுமையாக நடைமுறைப்படுத்துவதென்பதோ இயலாத காரியம் என்றே நான் நினைக்கின்றேன். மாறாக சட்டம் எவ்வளவு கடுமையாக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்தச் சமூகச் சிக்கலும் கூர்ப்படையவே செய்யும் என்றே நான் நினைக்கிறேன். தொடர்ச்சியான கருத்துக்களின் மூலம் பெரும்பாலான மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டபின் மாற்றத்தை விரும்பாத அல்லது விரும்பியும் தம் சுயநலத்திற்காக விட்டுக் கொடுக்காத சிறு அளவிலான மக்களைக் கட்டுப்படுத்தி வழி நடத்தவே சட்டம் இயற்றப் படவேண்டும்; நடைமுறைப் படுத்தப்படவேண்டும். இதுவே யதார்த்தமானதும் கூட.

எமது மண்ணில் எத்தனையோ தியாகங்கள் நடக்கின்ற இக் காலப்பகுதியில் மக்கள் மனதிலும் மாற்றங்கள் உணர்வு பூர்வமாகவே ஏற்பட வேண்டும். குறிப்பாக ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் களத்தில் ஆயுதமேந்தி உரிமைக்காகப் போராடும் இவ் வேளையில் தமிழீழத்தில் உள்ள அனைத்துப் பெண்கள் மனதிலும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

சமூகத்தில் நிலவும் சாதி. சமய வேறுபாடுகளில் இருந்து விடுபட்டுத் தமக்கென ஒரு வாழ்வை ஏற்படுத்தத் தமிழீழப் பெண்கள் துணிந்து வந்தால் இந்தப் பிரச்சினை தீர்வதற்கான திறவு கோல் கிடைக்கும். அத்துடன் பெண்களும் ஆண்களைப் போல் தொழிற் கலவிகள் கற்று தொழில்வாய்ப்புக்களைத் தேடிக்கொள்வார்களேயானால் பெண்களின் கைக்கும் பொருளாதாரம் மாறும். இதனால் அவர்கள் மற்றவர்களில் தங்கியிருக்கும் நிலை நீங்கித் தங்களுக்கான வாழ்வை அமைக்கும் சுதந்திரத்தை பெற்றுவிட முடியுமென்று நான் நினைக்கிறேன். ஆனால் இங்கே மீண்டும் தாழ்வுச்சிக்கல் தலைதூக்குகிறது. ஆண்கள் செய்யும் தொழில்களைச் செய்யப் பொதுவாகப் பெண்கள் தயங்குகிறார்கள். சமூகம் தங்களைப் பார்த்துப் பழிக்குமென்றும் பயப்படுகிறார்கள். இவையெல்லாம் நீங்க மக்களின் மனதில் குறிப்பாகப் பெண்களின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். அம்மாற்றம் ஏற்படாதவரை இந்தச் சீதனப் பிரச்சினையும் அவர்களை நிழல் போலத் தொடரவே செய்யும்.

# சீதனமும் யாழ்ப்பாண சமூகமும்

அ. கௌரிகாந்தன்

'சீதனம்' அவசியமா? இல்லையா? என்று தர்க்கிக்க நான் வரவில்லை சமூகவளர்ச்சிக்கு பெரும் தடைக்கல்லாக இருக்கும் இந்த 'சமூககேடு' ஒழிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பவர்களுடனேயே எனது விவாதம்.

'சீசனம்'எவ்விதம் தோன்றியது என்பதும் இங்கு எனது தர்க்கம் இல்லை. குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பில் தோன்றிய ஒருசமூக நிகழ்வுப்போக்கு அதைத் தொடர்ந்து வரும் மற்றோர் சமூக அமைப்பால் சுவீகரிக்கப்படடு புதிய உள்ளடக்கதைதப் பெற்றுக்கொள்வது சர்வசாதாரணம். தாய் வழி சமூக அமைப்பில் இருந்த ஆண் பெண் உழைப்புப் பிரிவினை தந்தைவழி சமூக அமைப்பில் ஒரு பெண் அடக்குமுறையாக மாறவில்லையா? உருவம் அப்படியே இருக்க உள்ளடக்கம் மாறிவிடடது. பிரபுக்களும் போர் வீரர்களும் தமக்குள் ஜனநாயகத்தைப் பேண என உருவான றோமானிய கால பாராளுமன்றம் பிரித்தானியர் கைபடடு உழைக்கும் மக்களை - (ஆளப்படும் மக்களை) ஏமாற்றும் ஒரு கருவியாக மாறவில்லையா? வெளித்தோற்றம் ஓரளவிற்கு அப்படியே இருக்க உள்ளடக்கம் மாறவில்லையா? இப்படி எத்தனையோ. ஆகையினால் சீதனத்தின் வரலாறுபற்றி விவாதிப்பதில் அர்த்தமில்லை. இங்கு எமது விவாதம் சீதன ஒழிடபுஎவ்விதம்என்பதுதான்.

சீதனத்தை ஒழிக்க சட்டம் வேண்டுமா என்பதுகூட இங்கு எமது விவாதமாக இருக்கமுடியாது. வீதியில் குப்பை கூழங்களை கொட்டுவதை தடுக்க சட்டம் உண்டு கண்டகண்ட இடங்களில் மலசலம் கழிப்பதைத்தடுக்கச்சட்டம்உண்டு. நாயை ஒழுங்காக வளர்க்க வைக்க சடடம் உண்டு ஒரு குடுப்பம் எவ்விதம் அமைய வேண்டும் என்பதை நெறிப்படுத்த மட்டும் சடடம் வேண்டாமா? இது என்ன விதண்டாவாதம? சட்டம்வேண்டும். அதில் சந்தேகம் இல்லை.

சரி இன்றுவரை சீதனம் வாங்குவது தொடர்பாக சட்டம் ஏதும் இலலாமலா இருந்தது? சீதனம் வாங்குவதை நியாயப்படுத்த,ஊக்கப்படுத்த தறபோது சடடமஇல்லையா? மிகப் பலமான சட்டம் நடைமுறையில் உள்ளது. ஆம். சடங்கு. சம்பிரதாயம், சமூக ஒழுங்கு, சமூக பழக்கவழக்கங்கள் இவைதான் அந்தச் சட்டம். சீதனம் கொண்டு வராத பெண்ணை சித்திரவதைப் படுத்துவதை யாரும் தவறு என்கிறார்களா? இல்லை. அது பெண்ணின் விதி என்றல்லவாசொல்லப்படுகின்றது. சீதனத்திற்காக உழைத்து ஓட்டாண்டியாகிப்போன தாய் தந்தையரையும், சகோதரர்களையும் எண்ணி யாராவது வேதனைப்படுகிறார்களா? இல்லையே. பெண் பிள்ளைகளைப் பெற்றதற்கு யார் என்ன செய்வது என்று தானே கூறுகிறார்கள் சீதனத்திற்கு உழைக்க முடியாது போன பெற்றோரை மகள் கூட மதிப்பதில்லையே அது ஏன்? சீதனம் வாங்காது திருமணம் முடித்த ஆண்களை வாழத்தெரியாதவன் 'பொண்ணையன்' என்று பெண்கள் உட்பட சமூகம் பேசுவதில்லையா? அது ஏன்? சீதனம் வாங்குவது தான் ஆண்மைக்கு அழகு'' ''சீதனத்திற்கு உழைப்பதுதான் சகோதரனின் கடமை'' ''சீதனம் கொடுக்க முடியாத பெற்றோர் எதற்காக பெண்பிள்ளைகளைப் பெற வேண்டும்'' போன்ற கருத்துக்கள் மாற்றமுடியாத வேதங்களாக ஆகிப் போயிருப்பது ஏன்? இவை எவ்விதம் இவ்வளவு நேர்த்தியாக, கடடுக்கோப்பாக பாதுகாக்கப்படடு வருகின்றன! ஆம் இவை எழுதாத சட்டங்களாக்கப் ட்டு விட்டன. இச் சட்டங்களை மீறமுடியாதபடி சமூகம் தனது சடங்குகளால் ஒவ்வொருவரையும் பலவந்தப் படுத்துகிறது. மீறுவோர்கள் சமூகத்தல் நின்றறுக்கப்படுகிறார்கள். ஏதோ ஒருவகைச் சடடத்தால்பாதுகாக்கப்பட்டு வரும் இச் 'சீதனத்தை' அன்றறுக்க வேறேதோ ஒருவகைச் சட்டம் அவசியம் என்பதை யார்தான் மறுப்பார்.

சிறு உற்பத்தியாளர் தன்மை கொண்ட நடுத்தர வர்க்கத்தைப் பெரும்பான்மையாகக் கொண்டதே யாழ்ப்பாணமாகும். இங்கு ஒவ்வொரு குடும்பமும் தனக்குத் தனக்கென்று தனியான தனிச் சொத்துச் சேர்ப்பதிலேயே அதிக நாட்டங்கொண்டுள்ளது இச்சொத்துச்சேர்ப்பு என்பது சமூக பொருளாதார மேல் நிலையாக்கத்திற்கான ஒரு வழிவகையாக விளங்குகிறது. உத்தியோக உயர்வு மற்றோர் வழியாகும். யாழ்ப்பாணத்து சீதனம் பெண்ணின் மாப்பிளைக்கு ஒரு பிழைப்பைக் காட்டுவதாக கூறுவது சுத்த அபத்தம் யாழ்ப்பாணத்து நிலமும் பவுணாக சேர்க்கப்பட்டுள்ள நகையும் உயர் உத்தியோகமும் மேலும் மேலும் ஒன்று குவிதலே யாழ்ப்பாணத்து சமூக மேல்நிலையாக்கமாகவுள்ளது. இத்துடன் யாழ்ப்பாணத்து சமூக மேல்நிலையாக்கத்தில் செயற்படும் மற்றோர் காரணி சாதியாகும். யாழ்ப்பாணத்து குடும்பம் ஒவ்வொன்றும் இச் சமூக மேல் நிலையாக்கத்திற்காக முயன்ற வண்ணமே உள்ளன. நகையும், காணியும், பதவியும் சாதியும் மேலும் மேலும் ஒன்று குவிகின்றன. இக் குவியலைச் சாத்தியப்படுத்தும் நெம்பு கோல்களில் மிகப் பலமிக்க நெம்புகோலே சீதனமாகும். இங்குதான் சீதனத்தின் சமூக பொருளாதார முக்கியத்துவம் அல்லது பங்காற்றல் தெளிவாகிறது.

யாழ்ப்பாண சமூகத்தின் மூலக்கூறாகசெயற்படும் சமூக குழு குடும்பமேயாகும்.அதுவே அடிப்படை மூலக்கூறுமாகும். அக்குடும்பத்தில் உள்ள ஆண் பெண் அனைவரும் ஒன்று சேர்ந்தே குடும்பத்தின் சமூக மேல் நிலையாக்கத்திற்காக முயலுகிறார்கள். ஆகவே ஒவ்வொரு குடும்பமும் சமூகமேல் நிலையாக்கம் என்ற ஏணியில் ஏறுவதற்கு சீதனத்தை பயன்படுத்தி வருகிறது இதில் ஆண் ஒருவிதமாகவும் பெண் வேறோர் விதமாகவும் செயல்படவில்லை எல்லோருக்கும் ஒரே ஆசைதான். எல்லோரும் ஒரே வேதந்தான்.

ஆனால் இங்கு பிரச்சினை சில குடும்பங்கள் சீதனத்தை பயன்படுத்தி ஏணியில் மேல் நோக்கி ஏறிவிடுகின்றன. சில குடும்பங்கள் சீதனப்பிரச்சினையால் கீழ்நோக்கி இறங்கி விடுகின்றன. பல குடும்பங்கள் சீதனத்திற்காக கடுமையாக உழைத்தும்கூட மேல் ஏறமுடியாமல் இருந்த இடத்திலேயே தொடர்ந்தும் நின்று வருகின்றன கீழ்நோக்கித் தள்ளப்பட்ட குடும்பங்களே சீதனத்தால் பாதிக்கப்பட்டு அதிரடித் தாக்குதலுக்கு உள்ளான குடும்பங்களாகும். பொருண்மிய ரீதியில் இக்குடும்ப ஆண்களும், பெண்களும் ஒரே விதமாகப் பாதிக்கப்பட்டாலும் திருமணமாகாத இளம் பெண்கள் மேலதிக பாதிப்பிற்கு உள்ளாகுகிறார்கள் 'கன்னி கழியாதநிலையே' அந்த மேலதிக பாதிப்பாகும். ஆண் மேலாதிக்க சமூகம் தோல்வியின் மேலதிகசுமையை பெண்ணின் மேல் சுமத்தி விடுகின்றது.

சீதனத்திற்கான காரணம் ஆணோ அல்லது பெண்ணோ அல்ல யாழ் சமூகம் சமூக மேல்நிலையாக்கத்திற்கு தங்கியிருக்கும் குறுக்கு வழியே சீதனத்திற்கான காரணமாய் அமைகிறது.அதாவது சீதனம் ஒரு ஆண்மேலாதிக்கப் பிரச்சினையல்ல.பொருண்மிய வெற்றிகளும் தோல்விகளும் ஆணுக்கும்பெண்ணுக்கும் சமமாகவே போய்ச்சேருகின்றன. ஆனால் பொருண்மிய தோல்வியில், பெண்கள்முன்சொன்னதுபோல்மேலதிகசுமையைச்சுமக்கிறார்கள்அதேபோல பொருண்மிய வெற்றியிலும்பெண்கள் காதல் வாழ்க்கைக்குப் பிடிக்காத (பொருண்மிய வாழ்க்கைக்குப் பிடித்திருக்கலாம்) ஒருவகை கட்டாய மணவாழ்க்கையை வாழ நிர்ப்பந்திக்கபபடுகிறார்கள். ஆண்களுக்கும் இதே நிலை தான்.

ஆகவே சீதனம் ஒரு சமூகத்தின் பிரச்சினை. அது ஒரு சமூகப்பிரச்சினை. ஆண்,பெண் இருபாலரும் சேர்ந்து அமைத்தகுடும்பம்அமைப்பால் பாதுகாக்கப்படும் குடும்பத்திற்காக பாதுகாக்கப்படும் ஒரு சமூக விஷக்கிருமி. இவ் விஷக்கிருமியால் தோற்றுவிக்கப்பட்ட நோயின் பெரும்பகுதியை பெண்களே அனுபவித்து துன்புறுகிறார்கள்.

சட்டம் போட்டு சீதனத்தை ஒழிக்கக்கூடிய ஒரு பக்குவ நிலையை இன்னமும் யாழ் சமூகம் எய்தவில்லை என்பதே எனது கருத்தாகும்.

இதற்காக சட்டம் அவசியமிலலை என்று அர்த்தப்பட மாட்டாது. இந்தப் பக்குவ நிலையை ஏற்படுத்துபவர்கள் தமது முயற்சியை சட்ட ரீதியாக நியாயப்படுத்துவதற்கு இவ்வித சட்டம் அவசியம். சட்டத்தின் பயன்பாடு ''தற்போதைக்கு'' இந்தளவிற்கே இருக்கும்.

''தற்போதைக்கு'' என்பதன் அர்த்தம் என்ன? யாழ் சமூக உருவாக்கத்திற்கு சீதனம் அவசியமாகவும். யாழ் சமூக உருவாக்கத்திற்கு சீதனம் சாத்தியமானதாயும் இருக்கும். சமூக காரணிகள் அகலும்வரை அல்லது அகல்வதற்கான வேலைத்திட்டம் நடைமுறையில் செயற்பட ஆரம்பிக்கும்வரையானகாலத்தையே தற்போதைக்கு எனக் கூறினேன்.

சமூக மேல்நிலையாக்கத்திற்கு சீதனம் அவசியப்படுகிறது என்பதை முதலில் பார்த்தோம். சமூக மேல்நிலையாக்கத்திற்கான புதிய வழிகள் யாழ் சமூக உருவாக்கத்துள் புகுத்தப்பட வேண்டும். அதாவது யாழ்ப்பாணத்துள் சேமிப்பாக, நகையாக, காணியாக, வீடாக உருவம் கொண்டுள்ள ''பணம்'', பணத்தையும் மூலதனத்தையும் சம்பாதிக்கும் மூலதனமாக மாறவேண்டும். யாழ். சமூகம் தொழில் மயப்படுத்தப்பட வேண்டும்.

யாழ். சமூகத்தில் சீதனம் எப்படி சாத்தியப்படுகிறது. இங்கு திருமணம் எனபது காதல் கொண்ட உள்ளங்களின் இணைவாகக் கருதப்படவில்லை. பணம் சேர்ப்பதும் சொத்து, சுகம், பதவி, சாதி ஆகியவற்றால் குடும்ப அந்தஸ்தை உயர்த்துவதுமே.

வாழ்க்கை என்பது சராசரி யாழ்ப்பாண கண்ணோட்டமாகவுள்ளது. அன்பை, காதலை இயற்கைஅழகை, உயிர்த்தன்மையுள்ள உறவை சுதந்திரத்தை அனுபவிப்பதுதான்எந்ததங்குதடையுமின்றி அனுபவிப்பதுதான் வாழ்க்கை எனற நிலை யாழ்ப்பாணத்து சராசரி மனித உணர்வாக மாறவேண்டும். அப்போதுதான் உயிரோட்டவாழ்க்கைக்குதடையாய்உள்ள சீதனத்தை ஒவ்வொரு ஆணும்பெண்ணும் வெறுக்க ஆரமபிப்பார்கள்.

இதற்கு என்ன செய்ய வேண்டும்? வாழ்க்கை பற்றிய எண்ணத்தில் மாற்றமேற்படுத்தவேண்டும். இது ஒரு பண்பாட்டு புரட்சி. தொழில் புரட்சியும் பண்பாட்டு புரட்சியும் யாழ்மண்ணில் என்று நடைமுறைச் சாத்தியமாகிறதோ அன்றுதான் யாழ் சமூகம் திருந்தும். அன்றுதான் சீதனம் ஒழியும்.


## அன்பளிப்புச் செய்யுங்கள்

பொதுமக்களுக்கான நூலகம் ஒன்று எம்மால் விரைவில் திறக்கப்படவுள்ளது. இந்நூலகத்திற்கான அன்பளிப்பாக உங்களால் தர இயன்ற புத்தகங்களைத் தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனம்,
ராஜவீதி,
கல்வியங்காடு.

(5015)

## முக்கிய அறிவித்தல்

தரம்! நாணயம்! நம்பிக்கை! நிறைந்த

**புனிதா நகை மாளிகை**

இன்று 04. 06. 93 முதல்
239, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு மாற்றம் செய்துள்ளோம்.
அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு அறியப்படுத்தவும்.

– உரிமையாளர்

(5024)

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாராவின்

**உணவுப் பார்சல்கள்**

காலை 11.30 மணி முதல்
பகல் 3.00 மணி வரை
கிடைக்கும்.

மீன் / இறைச்சி
ரூபா 30/-
மரக்கறி ரூபா25/-

மாணவர்களுக்கு
விசேட சலுகை
எல்லாவிதமான
உணவு ஓடர்களும்
கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**
சுண்டுக்குளிமகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி
(சி-6718)

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழக
(ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்)

## கலை விழா

இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மைதான அரங்கு
காலம்: 13-6-1993 மாலை ஞாயிற்றுக்கிழமை 5-30 மணி

### நிகழ்ச்சிகள்

★ பரதநாட்டியம்
செல்வி வாசுகி ஞானச்செல்வம்
மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்

★ கண்ணகி வழக்குரை
(ஆட்ட நாட்டுக் கூத்து)
த. வி. பு. இ. கலை, பண்பாட்டுக் கழகம்
வழங்கும்

★ களத்தில் காத்தான்
(சிந்து நடைக் கூத்து)

★ ஈழநல்லூர் மண்டலேஸ்வரன்
மெல்லிசை குழுவினரின்
இன்னிசை வார்ப்புகள்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

விளம்பர அன்பளிப்பு;
ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 11 வரை க.பொ.த. (சா/த) பகல் வகுப்புக்கள் நடைபெறுகின்ற

**விஞ்ஞான கல்வி நிலையம்
நல்லூர்**

[சி/6754]

### பொசன் சிந்தனைகள்:

# மகிந்த தேரர் மறுபடியும் மிகிந்தலைக்கு வந்தால்?

சமாதானத்தைவிட மகத்தான இன்பம்
வேறெதுவும் இல்லை

- தம்மபத: 202

நிலாந்தன்

மிகிந்தலைக் காடு.

தேவநம்பிய தீசன் மானைத் துர திக் கொண்டு சென்றான். கூர் அம்புகள் இலக்கின்றிப் பாய்ந்து மரங்களில் குத்தி நின்றன. மான் அம்புகளை விட வேகமாகப் பாய்ந்து ஓடியது. தீசன் இயலாமையும் களைப்பும் மேலிட மானின் பின் ஓடினான்.

திடீரென்று காட்சி மாறுகிறது இப்பொழுது மானுக்கு பதிலாகப் புலி. தீசனுக்குப் பதிலாகக் கிழநரி கிழநரிக்கு அருகில் முதலியார். மொசாட் கினிமினி சேனைகள் சூழ்ந்து வர முதலியார் புலியைத் துரத்துகிறார். புலி மானை விட வேகமாகப் பாய்ந்து செல்கிறது. பல தடவைகள் அது பின்னிருந்து பாய்ந்து இவர்களைத் தாக்குகிறது. முடிவற்ற புலி வேட்டை.

மறுபடியும் காட்சி மாறுகிறது. கிழநரிக்குப் பதிலாகப் போதிசத்துவர். அருகில் தலை முழுதும் நரைத்த தோட்டத்துரை. போதிசத்துவரைச் சுற்றிலும் கறுப்புப பூனைகளின் சேனை. எனினும், புலி தப்பிச் செல்கிறது.

திடீரென்று தோட்டத்துரை மறைந்து விடுகிறார். அவருடைய இடத்தில் இப்பொழுது டி. பி. யுத்தகவசங்கள் மூச்சை இறுக்க, திகைத்துப் போய் நிற்கிறார். நாட்டில் என்ன நடக்கிறது? இனப் பிரச்சினையா? பயங்கரவாதமா? வழமை போல அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற பேராசையும் அவரிடமில்லை. அவர் எப்பொழுதும் பின்னோடிதான். போதிசத்துவரின் நிழலில் பதுங்கியபடி தயங்கித் தயங்கி ஓடுகிறார். வேட்டை தொடர்கிறது.

மறுபடியும் காட்சி மாற்றம். இப்பொழுது போதிசத்துவரும் இல்லை. கறுப்புப் பூனைகளும் இல்லை. டி. பி. மட்டும் தனியே. 16 வருச காலமாக ஒரு பின்பற்றியாக இருந்தவரிடம் திடீரென்று தலையில் மகுடத்தை வைத்து, கையில் படைக்கலன்களைத் தந்து ''கையெழுத்துப் போடுகிறீரா'' என்று மட்டுமே கேட்டனர். மகுடம் கனத்தது. கவசம் உறுத்தியது. எனினும் சுகமாக இருந்தது. அதிகார சுகம். ஆனால் டி. பிக்கு ஒன்றுமே விளங்கவில்லை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற பேராசையுமில்லை. 16 வருச காலம் பின்னோடியாக இருந்த பழக்கம். இப்பொழுது முன்னோடுவதென்றால்? அதுவும் புலியைத் துரத்திக் கொண்டு?

''தயங்காதே டி. பி. புலியைத் துரத்திச் செல். நீ புலியைத் துரத்தவில்லையென்றால் புலி எங்களைத் துரத்திக் கொண்டு வரும். இப்பொழுது புலியைப் பிடிப்பதோ, வீழ்த்துவதோ அல்ல பிரச்சினை. புலி அம்புபடும் தூரத்திற்கும் அப்பால் எப்பொழுதோ சென்று விட்டது. குறைந்த பட்சம் புலியின் அசைவுகளையாவது எமது பார்வைக்குள் வைத்திருப்பது தான் பிரச்சினை. ஓடு புலியைத் துரத்து...'' யாருடைய குரல் அது? மிக முதிய பழகிய ஒரு குரல். டி. பி. சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு சிறுகுன்றின் உச்சியில் கிழநரி அமர்ந்திருந்தது. ஒருகையில் தம்மபத; மறு கையில் ''ஜொனி வோக்கர்'' விஸ்கி. கிழநரி அட்டகாசமாகச் சிரித்தது. ''நான் இன்னும் 20 வருடங்களிற்கு சாகாமல் இருப்பேன். பிறகு விஸ்கியும் அருந்திக் கொண்டு பரிநிர்வாணம் அடைவது எப்படி என்பதை பற்றிச் சிந்திப்பேன். அது வரை வோர்ட் பிளேசில் எனது இல்லத்திற்கு வரும் தொலைபேசி அழைப்புக்களிற்கு நான்தான் பதில் கூறுவேன். 20 வருசங்களிற்கு.''

டி. பி. தயங்கினார். மகுடம் கனத்தது. போர்க்கவசம் இறுக்கியது. அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. புலி, வெகு தொலைவில் பாய்ந்து செல்லும் ஒரு புள்ளி போல தோன்றியது. ''விடாதே டி. பி. துரத்திச் செல். லண்டனிலிருந்து மூத்த தளபதியைத் திரும்ப அழைத்துக் கொள். சிதறிக் கிடக்கும் உனது சேனைகளை அவர் மீளத் திரட்டுவார்.'' டி. பி. ஓடத் தொடங்கினார்...... புலி பார்வையிலிருந்து மறைந்து விடாதபடி அதைத் துரத்திச் சென்றாகவேண்டும்.....

இப்படி, புலியைத்துரத்திக் கொண்டு ஒரு சிறு மலையை வந்தடைந்தபோதுதான், தரிசனம் நிகழ்ந்தது.

மகிந்த தேரர் சீடர்களோடு மலையுச்சியில் தோன்றினார்.

''பொறு மன்னவனே...உயிர் வதை கூடாது.புலால்புசியாத, மது அருந்தாத நீ வேட்டைக்குப் புறப்பட்டதென்ன?''

டி. பி. திகைத்து நின்றார். மலைகளைவிடத் தொன்மையான குரல் அது. ''நான் மகிந்த தேரர். இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன். இற்றைக்கு 2,300 ஆண்டுகளிற்கு முன்பு இதே நாளில் இதே மலையடிவாரத்தில் மானைத் துரத்திக்கொண்டுவந்த மன்னன் தீசனைச்சந்தித்தேன் ..''

''என்னது இந்தியாவிருலிந்தா? ராம்ராம் ஓ ராம் ராம்'' கிழநரிஅது குந்தியிருந்த குன்றிலிருந்து ஒரே தாவலில் கீழிறங்கியது. ''இந்தியாவிலிருந்து வந்திருப்பது யார்? சில கிழமைகளிற்கு முன்புதானே ராம் வந்து போனார்? சில முதியவர்களின் மொட்டைக் கடிதத்தோடு...?''

''இல்லை. கிழநரியே நான் மகிந்த தேரர். அசோகப் பேரரசின் சமாதானச் செய்தியை கொண்டு வந்தவன்''.

கிழநரி கேட்டது; ''சமாதானச் செய்தியா?... ஓம்,ராமும் அதைத்தான் கொண்டு வந்தார். 87 ஜூலையில் நான் கொண்டு வந்த சமாதானத்தைப் புதுப்பிக்க ராம் வந்தார்''

''கிழநரியே, உன்னுடைய சமாதானம் இன்னமும் உயிர்த்திருப்பதாக நினைக்கிறாயா? அது குறித்து பெருமைப்படுகிறாயா?''

''ஓம், சந்தேகமென்ன? நான் எனது பேனாவின் ஒரு துளி மையைச் சிந்தி எழுதிய உடன்படிக்கைதான், எனது பெறுமதியான தளபதிகள் வீணாகக் குருதி சிந்துவதைத் தடுத்தது''

''ஆனால் உன்னுடைய சமாதானத்தின் தொடர்ச்சியாகத் தான் உன்னுடைய இனத்தவர்களே சுமார் 60,000 பேர் கொன்றொழிக்கப்பட்டார்கள். அதை உனது தோல்வியாகக் கருதவில்லையா?

''தேரரே அது என்னுடைய அரசியல் அல்ல. அது போதிசத்துவரின் அரசியல். அவர் தான் 60,000 சிங்களவர்களைக் கொன்றவர். 200 ஆடைத் தொழிற்சாலைகளை அமைக்க முயன்றவர். என்னுடைய ராஜ்ஜியம் கறுப்புப் பூனைகளின் ராஜ்ஜியமல்ல''?

டி. பிக்கு ஒன்றும் விளங்கவில்லை. விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற பேராசையும் இல்லை. 16 வருஷ காலப் பழக்கம். வழமைபோல திகைத்துப்போய் நின்றார். மகிந்த தேரர் மென்மையாகப் புன்னகைத்தார். கிழ நரியை அன்பு கூரப் பார்த்தார்.

''கிழ நரியே, நீ தொடக்கி வைத்த அரசியலைத்தானே போதிசத்துவர் வளர்த்துச் சென்றார்? உன்னுடைய சமாதானம் தன்னுள் யுத்தத்தின் வித்துக்களைக் கொண்டிருக்கவில்லையா? (முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர்) வெங்கடேஸ்வரன் கூறியது போல அது பிறக்கும்போதே செத்துப் பிறந்த ஒரு சிசு தானே?''

''இல்லை தேரரே, சமாதானத்திற்காக யுத்தங்கள் புரியும் யுகம் இது. சமாதானத்திற்காகச் செய்யப்பட்ட ஓர் உடன்படிக்கையில் யுத்தத்தின் வித்துக்கள் காணப்படுவது தவிர்க்கமுடியாதது. யுத்தத்தைப்பற்றிய பயம்தான் சமாதானம் இன்று.''

'என்னது? யுத்தத்தைப் பற்றிய பயம்தான்சமாதானமா?'

''சந்தேகமென்ன? 2300 ஆண்டுகளுக்கு முன்பு அசோகர் கலிங்கத்தில் ஒரு லட்சம் பேரைக் கொன்றார். பல்லாயிரக்கணக்கானோரை அங்கவீனராக்கினார். சிறைபிடித்துச் சென்றார். அந்த யுத்தத்திற்குப் பிறகு சிறிய அயலரசுகள் எதுவும் அசோகரை எதிர்க்கத் துணியவில்லை. என்பதால் அசோகரின் சமாதானம் எதிர்ப்பேதுமின்றி உபகண்டம் முழுவதும் விரிந்துசென்றது. யுத்தத்தைப்பற்றிய பயத்தால் தான் அசோகனின் சமாதானத்தைத் தேவநம்பியதீசனும் ஏற்றுக்கொண்டான்... அசோகனின் சமாதானத்தைப் போன்றதே என்னுடைய சமாதானமும் .. அசோகனின் சமாதானத்தின் நவீனநீட்சிஅது...

மகிந்தர்உறைந்து போய் நின்றார். 2300 ஆண்டுகளிற்கு முன்பு அவர் கொண்டுவந்த சமாதானத்திற்கு இப்படி ஒரு விளக்கமா? அல்லது 2300 ஆண்டுகளிற்குள் சமாதானத்தின் அர்த்தம் இப்படித் திரிக்கப்பட்டுவிட்டதா? யோசித்தபடியே அவர் டி. பி.யைப் பார்த்தார்.டி பிக்கு இப்பொழுதும் ஒன்றும்விளங்கவில்லை. விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற பேராசையும் இல்லை ..

திடீரென்று புலியின் உறுமல் மலைச்சிகரங்களில் மோதி பயங்கரமாய் எதிரொலிக்கிறது. கிழநரி பதற்றமடைகிறது. ''புலி தப்பிச் சென்றுவிட்டது. நாங்கள் அதைத் துரத்திச் செல்லாவிட்டால் அது எங்களைத் துரத்திக்கொண்டுதலை நகரம் வரை வரும். டி. பி. உன் படைக்கலன்களை எடு .. ராம்ராம் ஓ ராம் ராம்...''

''சற்றுப்பொறு கிழநரியே.. கொல்லாமை, உயிர்வதையாமை ..'' மகிந்தர் அவசரமாகத் தடுத்தார். ஆனால் அவர் நீட்டிய வெள்ளரசுக் கிளையை நிராகரித்து விட்டு கிழநரி முன்னே செல்ல, டி. பி. பின் தொடர, யுத்த சன்னதராக சேனைகள் அணிவகுத்துச் செல்ல...

மகிந்த தேரர் மிகிந்தலையில் தனியனாய் நின்றார். 2300 ஆண்டுகளிற்கு முந்திய புனிதமான ஞாபகங்களோடு.

---

# சோசலிசம் தானாக சாகவில்லை கொலை செய்யப்பட்டிருக்கிறது



பிடல் காஸ்ட்ரோ

சாண்டனிஸ்டா விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவரும், நிகராக்குவாவின் அமைச்சருமாக பதவி வகித்த தோமஸ் போர்கே சமீபத்தில் தனது பழைய நண்பரும், கியூபாவின் தலைவருமான பிடல் காஸ்ட்ரோவை சந்தித்து உரையாடினார். லண்டன் கார்டியன் பத்திரிகையில் வெளியாகிய இப்பேட்டியை 'சுபமங்களா' சஞ்சிகை (ஏப்ரல் 1993) தமிழில் மொழிபெயர்த்து பிரசுரித்தது. சுபமங்களாவில் வெளியாகிய இப்பேட்டியின் முக்கிய பகுதிகளை இங்கு தருகிறோம்.

கேள்வி: சமீபத்தில்நீங்கள் சோவியத் யூனியன் பற்றிப் பேசும்போது அந்த நாடு முதுகில் குத்தப்பட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதன் மரணத்துக்கு கோர்பச்சேவ் போன்றவர்களும் சதி செய்தார்கள் என்று சொல்கிறீர்களா?

பதில்: இல்லை, கோர்பச்சேவை நான் அந்த மாதிரி சொல்லமாட்டேன்.

சோவியத் யூனியனில் நடந்ததென்னவெனில் கொடுமையான தன்னழிப்பு.சந்தேகமில்லாமல் இந்தத் தன்னழிவுக்கு அந்த நாட்டின் தலைவர்கள் தான் பொறுப்பானவர்கள். சிலர் தன் பிரக்ஞையற்று அதனைச் செய்தார்கள். நிச்சயமாக கோர்பச்சேவ் பிரக்ஞை பூர்வமாக இந்த அழிவைச் செய்தார் என்றுநான்சொல்லமாட்டேன். ஏனெனில் கோர்பச்சேவ் சோசலிசத்தை நெறிப்படுத்துவதில்தான் நோக்கம் கொண்டிருந்தார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

சோவியத் யூனியன் தன்னளவில் தன்னழிவினாலேயே சிதறடிக்கப்படாமல் இருந்திருந்தால் ஒருபோதும் ஏகாதிபத்தியம் அதனை சிதறடிப்பதற்கான வலிமை கொண்டிருக்கமுடியாது

நான் சொல்வது இதுதான்: சோசலிசம் இயல்பில் சாகவே சாகாது. சோசலிசம் கொலை செய்யப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் சொல்கிறேன்.

கேள்வி: இப்போது ஜனநாயகம் பற்றி அதிகமாகப் பேசக் கேட்கிறோம். இடதுசாரிகளின் வட்டாரங்கள் உட்பட ஜனநாயகம் பற்றி அதிகம் பேசப்படுகிறது. உங்களின் பார்வையில் ஜனநாயகம் என்பது என்ன?

பதில்: இங்கே பார் தோமஸ்! மிகச்சுருக்கமான வார்த்தைகளில் ஜனநாயகம் என்பது லிங்கன் சொன்னபடி மக்களின் அரசு, மக்களால் ஆளப்படும் மக்களுக்கான அரசு.

என்னளவில் ஜனநாயகம் என்பது குடிமகனின் அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பதாகும் அந்த உரிமைகளில் சுதந்திரமாயிருப்பதற்கான உரிமை. தன் சார்பு உரிமை. தேசியபெருமித உரிமை,பரஸ்பர மரியாதைக்கான உரிமை ஆகியன அடங்கும். என்னளவில் ஜனநாயகம என்பது மனிதர்க்கிடையில் சகோதரத்துவம், நேசம்.

நான் சொல்வேன்; முதலாளித்துவ ஜனநாயகம் இந்த எந்த உரிமைகளையும் கொண்டிருக்கவில்லை மிகச்சிலர் அதிகமான வாய்ப்புக்களோடு,

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேவை

### (1) கணக்கு பதியுனர் (Accounts Clerk)

தகைமைகள்:-

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. (சா/த)பரீட்சையில்ஆங்கிலம் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது,

க. பொ. த. (உ/த) பரீட்சையில் 3 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன், I. A. B. பரீட்சையில் (லண்டன்) சித்தியுடன் 2 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

### (2) காசாளர் (Cashier)

தகைமைகள்:-

க. பொ. த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 5 பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஏனைய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வேலை அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

மேற்படி வெற்றிடங்களிற்கு தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை 09 06 93ஆம்திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

(சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.)

முகாமையாளர்.
மருந்து பால்மா (தனியார்) வரையுள்ளது,
இல: 484, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

(5021)



## நாங்கள் உங்களை அண்மித்துவிட்டோம்

உங்களுக்குத் தாமதம் இன்றி உடனடிச் சேவையை வழங்கவும் மேலும் சிறந்த சேவையை அளிக்கும் முகமாகவும், பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுதலிற்கு இணங்கவும் நாங்கள் கந்தர்மடத்திலிருந்து இல. 7, குமாரசாமி வீதி, செந்தாமரையில் எங்களது தரமான, சுவையான உணவுப் பார்சல்களை வழங்க-

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா தீர்மானித்துள்ளது.

உங்களது TAKE AWAY பார்சல்கள் மற்றும் ஓடர்களுக்கும் மேலே குறிப்பிட்ட முகவரை நாடுங்கள்.

உணவுப்பார்சல்களை முற்பகல் 11 30 மணிமுதல் பிற்பகல் 3 00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

★ பதிவுகள் முன்கூட்டியே ஏற்கப்படும்.

ஜோ. எகட்டனின் **ஜெசித்தாரா,**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

புது யுகத்தில் புது உருவம் ஜெசித்தாரா (ஓ-6750)



## பதவி வெற்றிடங்கள்

புலிகளின் குரல் வானொலி நிலையத்தில் பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன:

### 1. பிரதம செய்தித் தொகுப்பாளர்:
வயது: 25-50

வானொலி அல்லது பத்திரிகையொன்றில் ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம்.

தமிழ், ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், சிங்கள மொழியறிவு விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

### 2. செய்தித் தொகுப்பாளர்கள்:
வயது: 21-40

பத்திரிகையொன்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவம். வானொலியில் பணிபுரிந்த அனுபவம்.

தமிழில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் ஆங்கில, சிங்கள மொழிஅறிவு விசேட தகைமைகளாகக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி

**1993-06-15**

விண்ணப்பங்களை புலிகளின் குரல், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(சி-6706)


## சோசலிசம்

மிகப் பெரும்பாலோர் ஏதுமற்றும் இருக்கின்ற இந்த நாடுகளில், ஒருவர் எவ்வாறு ஜனநாயகம் இருக்கிறது என்று பேசுகிறார் என நான் ஆச்சரியம் கொள்கிறேன் என்ன மாதிரியான சகோதரத்துவம் அல்லது சமத்துவம் ஒருகே டீஸ்வரனுக்கும் ஒரு பிச்சைக்காரனுககும் இடையில் நிலவ முடியும்?

எமது சமூகஅமைப்புஒப்பீட்டளவில் எநத அமைப்பை விடவும் ஜனநாயகத்தன்மை வய்ந்தது என்று நான் நினைக்கிறேன். ஒப்பிடடுப் பார்க்கவே தேவையற்று, அமெரிக்க நட்டை விடவும் எமது அமைப்பு மிகமிக ஜனநாயக ரீதியானது ஆகும்.

கேள்வி: கியூபாப் புரட்சியின் அடிபபடை உயிர் வாழ்வுக்காக பொருளாதார தளத்தில் நடந்து கொண்டிருக்கும் சாராம் சமான போராட்டம்பற்றி நான் இப்போது பேச விரும்புகிறேன். உடனடியான உங்கள் இலக்கு என்ன? நீண்ட நோக்கில் உங்கள் இலட்சியம் என்ன?

பதில்: 1989 ல் ஜூலை 26-ம் ஆண்டு விழாவில (மன்காடா கொத்தளத்தைத் தகர்த்த நாள், ஒரு புரட்சிகர தேசிய விடுதலை நாள்), காமாக்குவாவில நான் சொன்ன விசயங்கள் மிகப்பல செவிகளுக்கு விநோதமாகக் கேட்கிறது.

போராடுவதற்கான எமது தயார்நிலை பற்றிப் பேசியது ஆச்சரியமாகபபடுகிறது.

அ போது பேசிய அந்தவார்த்தைகள் இதோ:

''எப்போதைக் காட்டிலும் இப்போது நாங்கள் யதார்த்தமாக இருக்கிறோம் நாங்கள் ஏகாதிபத்தியத்திற்கு எச்சரிக்கை செய்கிறோம். சோசலிச சமூகக் கூட்டமைபபில்(சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்) ஒரு முறிவு ஏற்பட்டால் எமது புரட்சி தொடராது என்ற பிரமைகளை வளர்ப்போருக்கு நாங்கள் எச்சரிக்கை செய்கிறோம்.

ஏனெனில் நாளை அல்லது ஏதோ ஒரு நாளில் சோவியத் யூனியனில் மிகப்பெரிய உள்நாட்டு கொந்தளிப்புஏற்பட்டு அந்த நாடு சிதறிப்போகும்- அது ஒருபோதும் நடக்காது என்று நாங்கள் நம்புகிறோம்- சந்தர்ப்பத்தில் கூட கியூபாப் புரட்சி கியூபா மக்கள் போராட்டத்தைத தொடர்வர். எதிர்ப்பைத் தொடர்வர்.''

கவனி தோமஸ்! இவைகளை நான் சோவியத் யூனியன் சிதறிப் போவதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன் சொன்னேன்.

ஆமாம். வளர்ச்சிக்கான அனைத்துதிட்டங்களும் நெருக்கடிக்குள்ளாயிருக்கிறது.

தோமஸ்! நாங்கள் இப்போது அந்த நெருக்கடிக்காலகடடத்தின் மத்தியிலதான் இருக்கிறோம்.

மிகுந்த மனவருத்தத்துடன் நாங்கள் இபபோது முன்னுரிமைகளை உருவாக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். மிக முன்னேயே நாங்கள் 'அசாதாரண காலகட்டத்தை'க் (Special Period) கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். சமாதான காலததிலேயே அதைக்கொண்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம். அசாதாரண காலகட்டத்திட்டத்தை நாங்கள் முன்னமேயே வகுத்து வைததிருந்தோம். முழுமையான கடல் போக்குவரத்து முற்றுகை (Naval Blockade) ஏற்படுமானால் அதைஎதிர்கொள்வதற்கான திட்டம். ஆனால் இப்போது கடல் போககுவரதது முற்றுகை இல்லாமலேயே 'அசாதாரண காலகட்டத்தைக்' கொண்டுவர வேண்டியதாகிவிட்டது. எங்கள் மூல வளங்கள் (Resources) மிக அசாதாரணமான முறையில் கட்டுப்படுததப்பட்டுவிட்டது.

சரியாகச் சொல்ல வேண்டுமானால் எமக்குத் தேவையான எரிபொருளில் 50வீத சதவீதத்துடன் நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறோம். எமது நாட்டுக்குத் தேவையான இறக்குமதியில் 40வீத சதவீதமான பொருள்களோடு தான் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

எங்களது இலக்கு என்ன? இந்த 'அசாதாரண காலகட்டம்'(எதிர்த்து நிற்பதற்கு மட்டுமல்ல. எங்கள் வளர்ச்சிக்கும் தான்.

அத்தியாவசியத் தேவையற்ற உற்பத்தி அனைத்தும் வீழும். நடைமுறையில் எமது சமூக மேம்பாட்டுத் திட்டங்களைக்கூட செயலற்றதாக்க வேண்டிவரும்.எங்கள் கட்டட நிர்மாணத் திட்டங்கள் வீட்டு வசதித்திட்டங்கள்,குழந்தைப் பராமரிப்பு இல்லங்களுக்கான திட்டங்கள், சிறப்புபாடசாலைத் திட்டங்கள், தொழில்நுட்பப் பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழக வசதித் திட்டங்களை நலியவிட வேண்டும்.

முன்னுரிமையான திட்டங்களை சமூகத்தில்முழுவளர்ச்சியோடு சம்பந்தமானவற்றுக்கு வி வேண்டும். உதாரணமாக உயிர் தொழில்நுட்பம்(Biotechnology) மருந்துத் தொழிற்சாலை. மருத்துவக் கல்வித் தொழிற்சாலை. சுற்றுலாத் திட்டங்கள், உணவுஉற்பத்தித் திட்டங்கள் போன்றவைகள் முதலிடத்தை எடுத்துக்கொள்ளும். விஞ்ஞானத் திட்டங்களும் முழுவளர்ச்சியோடு தொடரும்.

ஆகவே எங்கள் சாராம்சமான கேள்வி என்பது அடிப்படை வாழ்வு மட்டுமல்ல. அதோடு மேல்நோக்கி வளர்ச்சியடைவது

எங்கள் அத்தனை துன்பங்களுக்கு இடையிலும் வளர்ச்சியடைவது.

கேள்வி:- சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடும் புரட்சிக்கு எதிரானவர்கள் மீது 'துப்பாக்கிப் படை'யின் (Firing Squad) தண்டனைகளை கியூபா வழங்காமல் இருந்தால் நல்லது.என்றுபலர்சொல்கிறார்கள்...

பதில்:- எவரும் கொலைத் தண்டனையை விரும்ப மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் அறிவேன் கியூபாவின் நண்பர்கள்உட்பட பலர் என்னிடமும் இது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் சொல்ல விரும்புவது இது தான். நடைமுறையிலிருக்கும் சட்டங்களின்படிதான் மிகக் கடுமையான குற்றங்களின் பின்னணியில் மரணதண்டனைசெயல்படுத்தப்படுகிறது

உலக அளவில் மரணதண்டனை ஒழிக்கப்படும் என்று ஒப்பந்தம் ஏற்படுமானால் நாங்களும் அதை ஒழிக்க ஒப்புக் கொள்வோம்.

ஒரு தலைப்பட்சமாக நாங்கள் மரணதண்டனையை ஒழிக்க ஒப்புக்கொள்ள முடியாது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொடர்ந்த பயமுறுத்தல் மற்றும் ஆத்திர மூட்டலுக்கெதிரான வாழ்வா சாவா எனும் அடிப்படையில், அடிப்படை வாழ்வுக்கான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நாங்கள் ஒருதலைப் படசமாக மரண தண்டனையை ஒழிக்க ஒப்புக் கொள்ளமுடியாது.

கேள்வி:- அமெரிக்காவைக் 'கண்டுபிடித்தார்கள் (Discovering America) என்று சொல்லிக் கொண்டு நடந்து கொண்டிருக்கும் விழாக்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:- இரண்டு கலாசாரங்கள் சந்திக்கின்றன' என்று சாதுரியமாகச் சொல்கிறார்கள் ஆனால் இந்தச் சொற்றொடர் எனக்கு ஒருபோதும் சரி என்று படவில்லை. உண்மையில் இது ஒரு கலாசாரத்தின் மீது மற்றொரு கலாசாரத்தின் திணிப்பு. பிறமக்களின் மீது மிக முன்னேறிய ராணுவ தொழில்நுட்பத்தை வைததுக் கொண்டிருக்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வன்முறையாளர்கள் ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த அடக்கு முறை இது.

இரண்டு கலாசாரங்களின் மாபெரும் இணைப்பின் 500 ஆண்டுகள் என்று பிதற்றுகிறார்கள். எந்த ஒரு தனி நாட்டின் மீதும்வெறுப்புற்று இவைகளை நான் சொல்லவில்லை. மிக நேர்மையாக நான் சொல்கிறேன். நிறவெறி பிடித்த ஐரோப்பியர்களால் அல்ல. ஸ்பானிஷ்காரர்களால் கியூபா காலனியாக்கப்பட்டது. அந்தக்காலனியாக்கத்தின் தவிர்க்கவியலாத கலவையாகத்தான் வெல்ல முடியாத இன்றைய எம் மக்கள் உருவாகியிருக்கிறார்கள்.

கேள்வி:- நீங்கள் என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள் - நீங்கள் தீவிரமான அசைக்க முடியாத படிப்பாளி என்று.

பதில்:- ஆமாம் தோமஸ்!

என் வாழ் நாளில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு புத்தகங்களை நான் படிக்கிறேன். படிப்பதற்கு இன்னும் அதிக நேரம் கிடைக்கவில்லையே என்று தான் எனக்கு மனசு வலிக்கிறது. எல்லாவகையான இலக்கியங்களையும் நான் படிக்கிறேன் எனது காப்பியங்களில் (Classics) பைபிளும் அடங்கும். எனது வார்த்தைப் பிரயோகங்களை அலசுகிற எவரும் பல பைபிள் வார்த்தைகளைக் கண்டுபிடிக்க முடியும். நான் 12 வருடங்கள் மத பாடசாலைகளில் பயின்றேன். லா சல்லி (La Salle) சகோதரர்களுடன், அதிகமான ரோமன் கத்தோலிக்கப் பாதிரிகளுடன் பயின்றேன். எனக்குப் படிக்க அதிக நேரம் கிடைத்தது. நான் சிறையில் கழித்த 1953 மற்றும் 1955 ஆகிய இரண்டு வருடங்கள் தான். நான் எப்போதும் படித்துக் கொண்டிருக்கிறேன். உதாரணமாக பொலிவார் (Bolivar) சம்பந்தமாக மிகப் பெரிய புத்தகத் தொகுதிகளைச் சேர்த்திருக்கிறேன். நான் பொலிவர் மீது எல்லையற்ற ஈர்ப்பு கொண்டிருக்கிறேன். மார்க்சை அந்த அளவு நான் சொல்லமாட்டேன். என்னை (Sectarian) என்றும் பிறர் சொல்லக்கூடும். ஆனால் மார்க்சையைப் போன்ற அறிவார்ந்த ஆழமானவர் அவரில்லை என்று நான் நினைக்கிறேன் நேற்றிரவு பாட்ரிக்சுஸ்கிந் (Patrick Suskind) எழுதிய நறுமணம் (Perfume) குறுநாவல் படித்துக் கொண்டிருந்தேன். தனி நபர் நட்பு அல்லாது கேபிரியல் கார்ஸியா மார்க் யூஸின் அனைத்துப் புத்தகங்களையும் நான் பார்த்திருக்கிறேன்.

கேள்வி:- நீங்கள் உங்கள் விருப்பமான எழுத்தாளர் என்று தேர்ந்தால் யாரைச் சொல்வீர்கள்?

பதில்:- செர்வாண்டிஸ்.

கேள்வி:- எந்தத் தயக்கமுமின்றித்தான் இதைச் சொல்கிறீர்களா?

பதில்:- எனக்கு எந்தச் சந்தேகமுமில்லை. அதன் கருத்துக்காக, அதன் உள்ளடக்க அழகுக்காக டான் குவிக்ஸாட்டை குறைந்த பட்சம் ஐந்து ஆறு முறை படித்திருக்கிறேன்.

கேள்வி:- கவிஞர்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள் பிடல்?

பதில்:- நெருடாவை நான் மிக விரும்புகிறேன் என்று சொல்ல வேண்டும். அவர் கவிதைகள் தான் நான் அதிகம் படித்த கவிதைகள். ஆயினும் நான் நிக்கலஸ் கிலலனுக்கு முன்னுரிமை தருவேன்.

கேள்வி:- நீங்கள் பாடுவீர்களா?

பதில்:- இசைக்காக தீவிரமான செவிகளை நான் கொண்டிருக்கிறேன். பாட விரும்புகிறேன். ஆனால் அதிகத் திறமை இல்லை.

கேள்வி:- நீங்கள் வாழ்வில் செய்தவை எவற்றுக்காவது வருத்தப்பட்டது உண்டா?

பதில்:- நாங்கள் தந்திரோபாயத் தவறுகள் (Tactical Mistakes) செய்திருக்கிறோம். அவற்றுக்கு நான் வருத்தப்பட முடியும். ஆனால் ஒன்றில் தெளிவான சிந்தனையோடு இருக்கிறேன்.

புரட்சி முழுவதிலும் நாங்கள் எப்போதும் ''இலட்சியங்களை மீறியது'' என்கிற தவறு செய்யவே இல்லை.

நான் மறுபடி பிறப்பேனேயாகின்

மறுபடி

இதே புரட்சிகரப் பாதையையே தேர்ந்தெடுப்பேன்.

# 'மேற்குலக சாத்தான்களும்' எகிப்திய மதவாதமும்

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் ஒரு நாள். எகிப்திய இராணுவ நீதிமன்றம் ஒன்றில் 1990ஆம்ஆண்டுஎகிப்திய சபாநாயகரை சுட்டுக் கொன்றதாக இசுலாமியஅடிப்படைவாதிகள் பலர்மீது மேல் விசாரணைகள் நடந்துகொண்டிருந்தது. இவர்கள் 'கமா' என சுருக்கமாக அழைக்கப்படும் 'அல் கமா' - அல் இசுலாமிய' எனப்படும் இசுலாமியக் குழு எனக்கருத்துப்படும் அமைப்பைச் சேர்ந்தவர்கள். கூண்டுகளில் அடைக்கப்பட்ட தாடி வளர்ந்த இவர்கள் முகத்தில் எவ்வித கவலையும் தென்படவில்லை. மாறாக வழக்கிலே சாட்சியம் அளிக்க வந்து கொண்டிருந்த எகிப்திய உள்நாட்டமைச்சர் மூசாவைக் கண்டவுடன் சினம் கொப்பளித்தது. அமைச்சர் சாட்சியம் அளிக்க கூண்டில் ஏறிய போது ''இறைவனே பெரியவன்'' ''அவனே நீதி வழங்குவான்'' என்ற குரலொலி நீதிமன்றத்தைக் கலக்கியது. ஏனென்றால் இவ் அமைச்சருக்கும் கமா இயக்கம் மரண தண்டனை வழங்கியிருந்தது. அமைச்சர் சாட்சியம் அளித்துக் கொண்டிருந்த போது நேரம் முற்பகல் 11.45 ஆகியது. அப்போது கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கமா இயக்கத்தின் முக்கிய தலைவரான கானி தனது தொழுகை விரிப்பை மெக்காவை நோக்கிய திசையில் விரித்தார். விரிப்பில் அமர்ந்து உரத்த குரலில் தொழுகையைத் தொடங்கினார். நீதிமன்றமே நிலை குலைந்தது. அமைச்சர் வாய் பேசாது இருந்தார். சில நிமிடங்கட்கு காலமே அசைவற்றுப் போயிற்று. கானி தொழுகையை முடிக்கும் போது 'அல்லா' எனக் குரலெழுப்ப நீதிமன்றத்திலிருந்த காவலர்கள், பார்வையாளர் என எல்லோருமே அவருடன் சேர்ந்து குரலெழுப்பினர். இது ஒரு சம்பவம். ஆனால் எகிப்தின் இன்றைய நிலையை விளக்க தக்க உதாரணமாகும்.

## இரண்டும் கெட்டான் நிலையில் எகிப்து:

இன்று எகிப்தில் நிலவும் நிலை மிகவும் குழப்பகரமானதாக உள்ளது. ஒருவித இரண்டும் கெட்டான் நிலைக்கு எகிப்திய அரசு தள்ளப்பட்டுள்ளது. மிக வேகமாக வளர்ந்து வரும் மத அடிப்படைவாதிகளுக்கு எதிராக மிகக் கடுமையான அடக்கு முறைகளை பிரயோகிக்கும் அரசுக்கு இவர்களின் கொள்கை, கோரிக்கைகளை அடக்க முடியாமல் ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் எகிப்திய சமூகத்தின் அடிநாதம் மதமே. அந்த உணர்வினை புண்படுத்தும் வகையில் எகிப்திய அரசால் நடக்க முடியாது. அண்மைக் காலமாக எகிப்திய அரசின் மேற்குலக ஆதரவு நிலை, அமெரிக்காவினால் கட்டுப்படுத்தப்படும் சந்தைப்பொருளாதார முறை புகுத்தப்பட்ட பின் ஏற்பட்ட பொருளாதார சீரழிவுகள், எல்லாம் சாதாரண எகிப்தியனை அரசின் மேல் வெறுப்பையும், மத அடிப்படைவாதிகளுக்கு ஆதரவினையும் வழங்கத் தள்ளிவிட்டுள்ளது. இதனால் எகிப்திய அரசே மக்கள் வெறுப்பை தணிக்க - அவர்கள் மதஅடிப்படைவாதிகளுக்கு வழங்கும் ஆதரவை குறைக்க - தானே இசுலாமிய மத அடிப்படைக் கருத்துக்களைப்புகுத்த நேரிட்டுள்ளது.

## அரபு நாடுகளின் திகைப்பு:

இவ்வாறாக எகிப்திலும்சரி, ஏனைய அரபு இசுலாமிய நாடுகளிலும் சரி மத அடிப்படைவாதம் வளர்ந்த அல்லது வளர்க்கப்பட்ட விதம் இசுலாமிய உலகின் பல அடிப்படை முரண்பாடுகளையே விளக்கி நிற்கின்றன. தொடக்கத்தில் மத அடிப்படைவாதம் 60,70 களில் அரபுலகில் வளர்ந்த பொதுவுடமை வாதம், மற்றும் முற்போக்குத் தன்மை கொண்ட அரபுத்தேசிய வாதத்திற்கு எதிராக - நான்கு கோடி மக்களைக் கொண்ட ஈரானின் சியா தீவிரவாதத்திற்கு எதிராக - ஜோர்தான், சவூதி, எகிப்து போன்ற நாடுகளில் சுனி மத அடிப்படைவாதம் என்பவற்றிற்கான தடுப்பாக பயன்படுத்தப்பட்டது. 1300 வருடசியா - சுனி மதப்பிரிவு பிளவுகள் இதற்கு பயன்படுத்தப்பட்டன. இவர்கள் முசுலிம் சகோதரத்துவம் என்கிற அமைப்பை தொடக்கத்தில் ஊக்கப்படுத்தினர். அதுபோலவே இதன் ஒரு பிரிவான கமாஸ் அமைப்பை காசாப் பகுதியில் இசுரவேலியர் பாலத்தீனிய விடுதலை அமைப்புக்கு தடுப்பாக உபயோகித்தனர். ஆப்கானில் முஜாகுதீன் போராளிகட்கு அமெரிக்க சி. ஐ. ஏ. சவூதி, பாக்கித்தான் வாரி, வாரி வழங்கியமை தெரிந்ததே. ஆனால் இன்று நிலை வேறு. தடுப்பாக பயன்பட்டவை எல்லாம் இன்று தவிர்க்க முடியாத சக்திகளாகி விட்டன. எனினும் இன்றும் இசுலாமிய மத அடிப்படைவாதம் பன்முகப்பட்டதாக ஒரே தலைமையின் கீழ் தாபனமயப் படுத்தப்படாத பல்வகைத் தன்மை கொண்டதாகவே அமைந்துள்ளது. சனநாயகவழிமுறைகள், வன்முறை வழிமுறைகள் என எல்லா வழிகளையுமே பின்பற்றுகின்றது. எனவே இன்றைய இசுலாமிய அடிப்படை வாதம் என்பது ஒரு பரந்த குடைக்கீழ் வரும் ஆழமான சமுத்திரம் போன்ற வேறுபாடுகளைக் கொண்டது என்கிறார் ஒரு ஆய்வாளர். என்றாலும் குரானும், அமெரிக்காவுக்கு எதிரான கடும் வெறுப்புணர்வும் இவற்றின் பொதுத்தன்மை. இன்று இசுலாமிய அடிப்படை வாதம் என்பது இசுலாமிய மக்களின் மன உணர்வினை வெளிப்படுத்தும், ஒரு குறியீடாக அல்ஜீரியாவிலிருந்து காஷ்மீர் வரை, எகிப்திலிருந்து பிலிப்பைன்ஸ் வரை பரந்து வாழும் முசுலீம் மக்களின் நம்பிக்கை ஒளியாகமாறுகின்றது. ஒரு காலகட்டத்தில் தீவிரவாதப்போக்கிற்கு எதிராக பயன்படுத்தப்பட்ட சுனி மத அடிப்படைவாதமே பெருமாற்றத்திற்குள்ளாகி அதை ஆதரித்த பிற்போக்கு அரபு நாடுகளையே திகைக்க வைத்துள்ளது.

## நெஞ்சில் பாய்ந்த வளர்த்த கடா:

இத்தகைய மாற்றங்களை தெளிவாக விளங்கிக் கொள்ள எகிப்தின் வரலாறு தக்கதோர் உதாரணமாகின்றதுஅதுமட்டுமன்றிஅரபுலகின் மிகமுக்கிய நாடான எகிப்திலேற்படும் மாற்றங்கள் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டியவைகளே. தொடக்கத்திலிருந்தே எகிப்தில் இசுலாமிய மத சக்திகள் அதன் அரசியலில் பெரிதும் தலையிட்டே வந்துள்ளன என்றாலும் 1981-ம் ஆண்டு எகிப்திய சனாதிபதி அன்வர் சதாத் கொலை செய்யப்பட்ட பின்னரே இசுலாமிய தீவிரவாதம் அதன் உண்மை முகத்தை உலகிற்கு காட்டியது. இக் கொலையோடு தொடர்ந்த விசாரணைகள் அரச நிறுவனங்கள், இராணுவத்துறை போன்றவற்றில் எவ்வளவு தூரம் இசுலாமிய மத அடிப்படைவாதிகள் ஊடுருவியிருந்தனர் என்பதை வெளிக்காட்டின. இங்குள்ள பெரிய முரண் என்னவென்றால் கொலை செய்யப்பட்ட அன்வர் சதாத்தே இம்மத அடிப்படைவாதம் வளர பிரதான காரணமாக இருந்தவர் என்பதே. கமால் அப்துல் நாசர் இறந்த பின்னர் பதவிக்குவந்தசதாத், நாசரின் ஆதரவாளர் ஏனைய முற்போக்காளரை தனது எதிரிகளாகக் கணித்தவர். நாசர் பின்பற்றிய ஏகாதிபத்திய, சியோனிச எதிர்ப்புக் கொள்கைகளைக் கைவிட்டு மேற்குலகோடு, இசுரவேலோடு நட்பாக முயன்றார். உள்நாட்டில் தனது நிலையை உறுதிப்படுத்த விரும்பி இசுலாமிய மத அடிப்படைவாதக் கட்சியான முசுலீம் சகோதரத்துவம் (Muslim Brotherhood) போன்றவற்றோடு உடன்பாடு கண்டார். (இக் கட்சியே மிகப் பழைய இசுலாமிய மத அடிப்படைவாதக் கட்சியாகும். 1928-ம் ஆண்டில் உருவானது) இவர்களோடு உறவு பூண்ட பின் இவர்கட்கு முழுச் சுதந்திரம் அளித்தார். சிறையிலிருந்த அடிப்படைவாதிகளை விடுவித்தார். அதேசமயம் இடதுசாரிகளைத் தூக்கி சிறையில் போட்டார். ஆனால் கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட நிலை போலாயிற்று சதாத்தின் நிலை. ஏனென்றால் சாதகமான சூழ் நிலையைப் பயன்படுத்தி மிக வேகமாக-பலமான சக்தியாக உருவெடுத்த இவை, சதாத்தின் மேற்குலக விசுவாசத்திற்கும் அரபுலகை கைவிட்டு இசுரேலோடு காம்ப் டேவிட் உடன்பாடு கண்டமைக்கான தண்டனையை தமது கையாலே வழங்கின.

இவ்வாறாக ''அறிவியலையும், மத நம்பிக்கையையும்'' மேற்குலகப்பாணியில் இணைக்க முற்பட்டவர் கதை முடிந்தது. கொலைக்குப்பின்னர்கொலைக்குக் காரணமான 'அல் ஜிகாத்' போன்ற பல தீவிரத் தன்மை கொண்ட இயக்கங்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டன. அதே சமயம் முசுலீம் சகோதரத்துவம் போன்ற இசுலாமிய அடிப்படைவாதக் கட்சிகளோடு தொடர்ந்தும் நல்லுறவைப் பேணவே அரசு முயன்றது. 1980இன் தொடக்கத்திலேயே எகிப்தின் ஒரு பகுதியில் மட்டுமே மத அடிப்படைவாதிகள் நிலை கொண்டிருந்தனர். ஆனால் இன்று நிலை வேறு.

## பலம் பெறும் இசுலாமிய அடிப்படைவாதம்:

இன்று உலகிலே மிகப் பலம் வாய்ந்த இசுலாமிய மத அமைப்பு எகிப்திலே தான் வளர்ந்துள்ளது. இன்று முசுலீம் சகோதரத்துவம் எனப்படும் செல்வாக்குள்ள இசுலாமிய மத அடிப்படைவாதக் கட்சியை விட இருபதுக்கு மேற்பட்ட மிக இரகசியமாக திட்டமிட்டு இயங்கும் தீவிரவாத அமைப்புக்கள் அங்குண்டு. இவற்றுள் கமா இயக்கம் பிரதானமானது. இவர்கள் நிலைப்பாடு எகிப்திய மக்களைப் பெரிதும் ஈர்த்துள்ளது. அரசியலிலிருந்து மதம் பிரிக்கப்பட முடியாதது என்பதையும் சரியத் (Shariath) எனப்படும் இசுலாமிய கோட்பாடுகள்முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் இவர்கள் மிகத்தெளிவாக வலியுறுத்துகின்றனர். இசுலாமுக்கு எதிராக கடவுள் நம்பிக்கையற்ற பொதுவுடமை வாதிகள், கிறீத்தவர்கள், சியோனிசவாதிகள் சதி செய்வதாகவும் இவர்கள் நம்புகின்றனர். இவர்களுடைய ஆன்மீகக் குருவாகக் கருதப்படும் அமெரிக்காவில் உள்ள ஷேக் அமார் அப்துல் ரகுமான் வார்த்தையில் கூறுவதானால் ''எகிப்திய ஆட்சியாளர் தமது! இவ்வுலக இன்பங்களுக்காக எகிப்திய மக்களை, அவர்கள் மதத்தை, மனசாட்சியை மேலைத்தேய

### பாலகுமாரன்

சாத்தான்களுக்கு விற்று விட்டனர்.'' ''அல்லாவிற்கு எதிரான பகைவர்களுடனான போரில் என்றுமே போர் நிறுத்தம் கிடையாது.'' ''கண்ணுக்குக் கண். இறந்த ஓர் உடலுக்கு இன்னொரு இறந்த உடல்'' என்பதே இவர்களது நிலைப்பாடு. இதன் காரணம் பற்றியே எகிப்திலுள்ள முற்போக்கு புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள், எகிப்துக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் ஆகியோர் கொல்லப்படுகின்றனர். இதைவிட எகிப்தில் காலம் காலமாக வாழும் எண்பதுலட்சம் கிறிஸ்தவர்பாடும் இன்று பெரும்பாடாகிவிட்டது. அவர்களது வீடுகள், வர்த்தக நிறுவனங்கள், வணக்கத்தலங்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றன.

## கோட்பரப்பு மையங்களாக பள்ளிவாசல்கள்:

எகிப்திய அரசே வேறு வழியில்லாமல் தனது சொந்த உத்தியோக பூர்வமான இசுலாம் மதக் கோட்பாடுகளை கைக்கொள்ள தள்ளப்பட்ட இந்நிலையை மத அடிப்படைவாதிகள் பயன்படுத்தி அரச நிறுவனங்கள், நாடாளுமன்றம் இராணுவம் மற்றும் வைத்தியர், சட்டவல்லுநர், பொறியியலாளர் போன்றோரை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புக்கள் எல்லாவற்றிலும் நன்கு ஊடுருவி அவற்றின் தலைமையைதமதுகட்டுப்பாட்டினுள் கொண்டு வந்து விட்டனர். பல்கலைக்கழகங்களிலும் இதே நிலைதான். இன்றுஎகிப்திய அரசு இந்நிலையைத் தடுக்க முயலும் அதே சமயத்தில் தானே சட்டம் மற்றும் கல்வித்துறைகளில் இசுலாமிய மதக் கருத்துக்களை புகுத்தவும், வானொலி, தொலைக்காட்சிகளில் இதற்கே கூடிய நேரம் ஒதுக்கவும் தள்ளப்பட்டுள்ளது. இன்று தொலைக்காட்சியில் முப்பது வீத நேரம் மதத்திற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று இசுலாமிய மத அடிப்படையில் இயங்கும்வங்கி முறை, வைத்திய கல்விநிறுவனங்கள், மனிதாபிமான உதவி அமைப்புக்கள் அரசாங்கத் துறையை விட திறமையாகவும் கூடிய சேவை மனப்பான்மையுடனும் இயங்குகின்றன. அது மட்டுமன்றி இவை எகிப்திய மக்களின் அடிமட்டத்தில் ஊடுருவி நன்கு வேரூன்றியும் விட்டன. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மத நிறுவனங்களிலே இவர்கள் ஊடுருவி பிரபல மதத் தலைவர்களின் ஆதரவினையும் பெற்று வருகின்றனர். இன்று எகிப்தில் இருக்கும் ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள், இசுலாமிய அடிப்படை வாதத்தின் விளைநிலங்கள் ஆகும். இவையே கோட்பரப்பு மையங்கள் ஆகும். இதனைச் சட்டரீதியாகதடுக்க எகிப்திய அரசு எவ்வளவோ முயன்றும் பயனில்லை. ஏனென்றால் இன்று கூட கெய்ரோவின் மையப் பகுதியில் உள்ள பிரபல பள்ளிவாசலில் வெள்ளிக் கிழமை தொழுகையின் பின்னர் பிரதான மதகுரு எகிப்திய சனாதிபதிக்கு இறப்பு நேரிடவேண்டும் என்றே தனது ஆன்மீகப் போதனையை முடிக்கின்றார்.

இது மட்டு மன்றி எகிப்தின் பொருளாதாரமே ஆட்டம் காணும் நிலை இன்று. அமெரிக்காவினதும்; சவூதியினதும் இராணுவ நிதி உதவிகளை நம்பியே எகிப்து இன்று காலம் தள்ளுகின்றது. எகிப்தின் பிரதானமான வருவாயைத் தரும் உல்லாசப் பயணத்துறையே இன்று முடக்கப்பட்டுவிட்டது. உல்லாசப் பயணிகள் தாக்கப்படுவதால் வருடாந்தம் மூன்று பில்லியன் அமெரிக்க டாலர் வருமானம் தரும் தொழில் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. இவை எல்லாவற்றையும் கருத்திற் கொண்டே எகிப்திய ஜனாதிபதி மிகக் கடுமையான அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றார். கைது செய்யப்படும் ஆயிரக்கணக்கானவர்களில் 7, 8, வயதுச் சிறுவர்களும்அடங்குகின்றனர். இவர்களும் தீவிரவாதிகளாகவே கணிக்கப்படுகின்றனர். மனித உரிமைகள் பெரிதும் மீறப்படுவதாக Middle East Watch என்கிற மனித உரிமைகள் காப்பு இயக்கம் பெரும் குரலெழுப்புகின்றதுகெய்ரோ, அல்பாஸ் நகரங்கள் இன்று போர்க்களங்களாக மாறிவிட்டன. கெய்ரோவின் சேரிப் புறங்கள், நைல் நதியின் கரையோரக் கிராமங்கள் எல்லாம் பாதுகாப்பு படைகளின் முற்றுகையில் தான் உள்ளன.

ஆனால் பாதுகாப்பு படைகளின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் கடும் பதிலடி கொடுக்கப்படுகின்றது. தனிநபர் கொலை செயற்பாடுகள் முன்னர். இன்றோ பாதுகாப்பு படைகள், அவர்கள் நிலைகள், காவல் நிலையங்கள் எல்லாமே தாக்கப்படுகின்றன. இராணுவ ரீதியாக அன்றி சனநாயக வழிமுறையாலும் தேர்தல்களில் வெற்றிபெறும் வாய்ப்பு இவர்கட்கு அதிகரிப்பதைக் கண்டு அஞ்சிய எகிப்து அல்

(2ஆம் பக்கம் பார்க்க)

# தீவுப் பகுதிக்குள் புலிகள் பலமுறைஊடுருவியுள்ளனர்

## கொப்பேகடுவ கொலை வழக்கில் சாட்சியம்

1991 ஒக்டோபர் முதல் 1992ஆகஸ்ட்வரைவிடுதலைப் புலிகள் 5 முறை அராலித்துறைக்குள் ஊடுருவினார்கள். இரவிலேயே அவர்கள் கண்ணிவெடிவைப்பதற்கு வருவார்கள், 1991 நவம்பர் 20 ஆம் திகதி வேலணை அராலித்துறையில் கண்ணிவெடி வெடித்ததில் அவ்வழியால் சென்ற இராணுவ வாகனத்திலிருந்த 8 படையினர் காயமுற்றனர். அங்குள்ள பாதைகள் தினமும் துப்புரவு செய்யப்படுவதுண்டு என பிரிகேடியர் கொட்வின் திலகரட்ன கொழும்பில் நடைபெற்றுவரும் அராலித்துறை கண்ணிவெடி தொடர்பாக சர்வதேச விசாரணைக்குழு முன்பாக சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

விசாரணையில் சாட்சியமளித்த மற்றொருவரான பொறியியல் இராணுவப் பிரிவின் கேணல் ஆரியரட்ன தகவல் அளிக்கையில், சுமார் 50 நிலக்கண்ணிகளை நான் இப்பகுதியில் கண்டெடுத்திருக்கின்றேன். யாழ்ப்பாணத்திலுள்ள கண்ணிவெடிகளில் ஜே என்ற எழுத்தும், மன்னாரிலுள்ள கண்ணிவெடிகளில் எம் என்ற எழுத்தும் இருக்கும். சிலவற்றில தமிழ் எழுத்தும் இருக்கும். நாம் இறக்குமதி செய்யப்பட்ட கண்ணிவெடிகளைத் தான் பயன்படுத்துகின்றோம் என்றார்.

விசாரணையின் போது திருமதி லாலி கொப்பேகடுவவும் அங்கு சமுகமளித்திருந்தார்.

### குடாநாட்டு

திருக்கிறான். கடற்புலிகளின் வளர்ச்சியும் எழுச்சியும் சிங்கள ஆதிபத்தியத்திற்கு பெரியதொரு அச்சுறுத்தலாக எழுந்திருப்பது எதிரிக்கு கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

யாழ்ப்பாண குடா நாட்டு முற்றுகை என்ற எதிரியின் போருபாயத் திட்டம் கடற்புலிகளால் உடைக்கப்பட்டிருக்கிறது. இதனால் இரண்டாவது கட்ட ஈழப்போரை குறித்த இலக்கில் நகர்த்த முடியாது எதிரி திணறிப்போய் நிற்கிறான்.

### இன்று

சித்தமருத்துவக் கண்காட்சி இன்று காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

இன்று முதல் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் நடைபெற இருக்கும் இக் கண்காட்சியை யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சம்மேளனம் ஒழுங்குசெய்துள்ளது.

## 10 ஆம் திகதி கூட்டம்

தென், வடமேல் மாகாண சபைகளை சட்டவிரோதமாக ஐக்கிய தேசியக் கட்சியிடம்ஒப்படைத்ததை எதிர்த்து பொதுக் கூட்டம் ஒன்றை 10 ஆம் திகதி காலியில் நடத்தவுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

### பிரேமதாசா

ணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் மேலும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா கைலேந்திரன், கரவெட்டி வடக்கைச் சேர்ந்த மார்க்கண்டன் செல்வராசா ஆகியோரையும் விசாரணைக்காக பொலிசார் தேடி வருவதாகவும் கூறப்பட்டது.

### பலியான

தங்கராஜா - மரக்காரம்பழை, சவரியம்மா - மடு, பி. பத்மநாதன் (23) ஈச்சங்குளம், சவுந்திராதேவி (24) புளியங்குளம், பி. இராமநாதன் (24) முத்தையன்கட்டு, சேரலிங்கம் (40) கிடக்கச்சூரி, பு. சோலமுத்து (37) கல்மடு, சி. வெள்ளசாமி(30) கிளிநொச்சி, எஸ். நிலநிதி (20) புதுக்குடியிருப்பு, கு. சுந்தரம் (58) ஓமந்தை, எம். மதுலேனம் (27) மடு, இ. புஷ்பவதி (34) புதுக்குளம், எஸ். ஜெயக்குமார் (9) வன்னேரிக்குளம், எம். பாக்கியம் [50] ஓமந்தை, மா. புஷ்பராஜா (28) புத்தூர், வை. தியாகராஜா (58) கிளிநொச்சி இவர்களைவிட இரண்டுபேர் கடும் காயங்களுடன் அநுராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

### ஜனசவிய

திரு. கணேசமூர்த்தியுடன் யாழ். அரச அதிபர் மந்திராலோசனை நடாத்தியுள்ளார். இதற்கான மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக யாழ். அரச அதிபர் மிக விரைவில் கொழும்பு செல்ல உள்ளார் என்றுயாழ் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் தெரிவித்தார்.

ஜனசவிய கருத்திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் இதுவரை இரண்டுஉதவிஅரசாங்க அதிபர் பிரிவுகள் மட்டுமே வங்கியில் கணக்குத் திறந்துள்ளன. ஆனால் இதுவரை யாழ். செயலகத்துக்கு மேற்படி கருத்திட்டங்கள் நிறுத்தப்பட்டது குறித்து உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லைஎன்று நேற்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.





ரேஸ்ரியின் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான நிபந்தனைகள்:-

பியர்,ஜாம் அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் அதற்குரிய அதிர்ஷ்டலாபசீட்டையும் பெற்றுக்கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

1 ஆம் பரிசு – சுவர்க்கடிகாரம்
2 ஆம் பரிசு – எவர் சில்வர் வீட்டுப் பாவனைப்பொருள்கள்.
3 ஆம் பரிசு - மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்.
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்

போத்தல்கள் ஒப்படைக்கவேண்டிய இடங்கள்:-

(1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம் (2) அறிவகம்-சாவகச்சேரி (3) சுபாஸ் பேக்கவுஸ்-நெல்லியடி (4) சுந்தரம் அன்சன்ஸ் சுன்னாகம் (5) சித்தி விநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு (6) சபாரிஸ் சுண்டுக்குளி (7) நீதினி Q சுன்னாகம் (8) செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய் (9) ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி வட்டுக்கோட்டை (10) இ. இராசதுரை பத்திரிகை விற்பனை நிலையம் இருபாலை சந்தி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6617)



## தேவை

லேத் (கடைச்சல்) வேலைக்கு அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

5-ம் திகதி மு.ப. 10-00மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:
ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். [5018]


## நீங்காத ஓராண்டு நினைவலைகள்

மழலையாய் 05 - 03 - 1971



மாவீரனாய் 04 - 06 - 1992

## 2-ம் லெப். தேவன் / ராஜ்

(கந்தசாமி மகிழ்ராஜ்)

ராஜ் என்னும் மாவீரனே
கண்ணைப் போல கருதி நாட்டிற்காக
களத்தில் குதித்தாய் தேவனே
சரித்திரத்தை படைத்த நீ
சரித்திரமாய் மாறினாய்
நண்பன் பாண்டியனுடன்
கடைசித் துளி இரத்தத்தையும்
நாட்டிற்காக சிந்தினாய்.

42, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (5029)

அன்புத்தாய்
சகோதர, சகோதரிகள்,

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 03-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9648

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-9188, 26-3937, 27-7717, 27-5535, 24-7961, 27-6579.


யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
யாழ்ப்பாணம்

பால் கொள்வனவு – விற்பனைக்கிளை

## திறப்பு விழா

உருமபராய் சந்தி

எமது சங்கத்தின் புதிய பால் கொள்வனவு - விற்பனைக் கிளை பலாலி வீதியில் உரும்பராய் சந்தியில் அன்னை பூபதி கலையரங்கத்தின் முன் அமைந்துள்ள கட்டடத்தில் 04-06-93 வெள்ளி [இன்று] மாலை 3 மணிக்கு சங்கத்தலைவர் திரு. சு. சிவபாலன் அவர்களால் திறந்து வைக்கப்படும். அங்கத்தவர்கள், வாடிக்கையாளர்கள், பணிப்பாளர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட (பிக்குற்றின்) கல்சியப்பவுடர் வாடிக்கையாளர் நலன்கருதி அரைக் கிலோ வீதம் பொதிசெய்து விற்பனை செய்யப்படுகின்றது.

த. சிறிகாந்தன்
செயலாளர்

(சி/6765)



யாழ்நகர்

ஸ்ரீதர் திரையரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

இரண்டாவது வெற்றிப் படைப்பு

## "இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10. 30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6736]



பாரதிதாசன் கல்வி நிறுவனம்

[ஸ்ரான்லி வீதி, யாழ்.]

B.A., G.A Q தமிழ்
திரு. சி. கணேசலிங்கம்
B. A. (Hons)

ஆரம்பம்: 5-6-93

B. A. 2 — 3 மணி
G. A. Q. 12 — 1 மணி

(யாழ் பேராதனை பல்கலைக் கழகம்)

★ திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மேலதிக வகுப்புகள் நடைபெறும்

(சி-6772)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.